விலை ரூபா 2-00 ★ 10 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 வைகாசி 6 ஷஃபா 28 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (19 5 85) இதழ் 98

★ அநுராதபுரம் படுகொலைகள்

புலிகள்
ரெலோ
ஈ பி ஆர் எல் எவ்
ஈரோஸ்

## மறுப்பு கண்டனம்!

(சென்னை)

அநுராதபுரத்தில் கடந்த 14-ம் திகதி இடம்பெற்ற படுகொலைகளுக்குத் தாம்

[10ம் பக்கம் பார்க்க]

### யாழ். மத்தியகல்லூரி அருகே

# மோட்டார் காரில் குண்டுவெடி

# சூட்டுசம்பவங்களில் மூவர் பலி!

(அலுவலக நிருபர் ஏ. வி எம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கருகே நேற்றுக்காலை மோட்டார் காரொன்றிலிருந்து குண்டொன்று பலத்த சத்தத்துடன் வெடித்தது. இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற சூட்டுசம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டனர். சுமார் 15 பேர்வரை காயமடைந்தனர்.

நேற்றுக்காலை திடீரென 11-30 மணியளவில் யாழ் மத்திய கல்லூரிக்கு அண்மையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார் ஒன்றிலிருந்து குண்டு வெடித்தது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியிலிருந்தும், அதற்கு அண்மித்த இடத்திலிருந்தும் துப்பாக்கி வேட்டுகள் சரமாரியாகப் பாயத்தொடங்கின. இடையிடையே குண்டுவெடிச் சத்தங்களும் கேட்டன.

(10-ம் பக்கம் பார்க்க)

### நெடுந்தீவு படகு மரணங்கள்:

## மரணச் சடங்குச் செலவு வழங்க ஜனாதிபதி உத்தரவு!

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு - குறிகாட்டுவான் பிரயாணிகள் படகுத் தாக்குதல் சம்பவத்தில் மரணமான ஒவ்வொருவருக்கும் மரணச் சடங்குச் செலவாக தலா 2,500 ரூபா அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்

இது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு

(10-ம் பக்கம் பார்க்க)

### வவனியாவில்

## இந்திய வம்சாவழியினர் 7 பேர் சுடப்பட்டு மரணம்!

### செல்லச்சாமி தகவல்

(யாழ்ப்பாணம்)

வவனியாவில் குடியிருக்கும் இந்தியவம்சாவழியைச்சேர்ந்த 7 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சம்பவம் குறித்து இலங்கைதொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு எம். எஸ் செல்லச்சாமி, பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இவர்கள் இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இரு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் சரவணனந்தன் [32 வயது] என்பவர்படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவரின் கன்னத்துக்கூடாக துப்பாக்கிச்சூட்டுச் சன்னங்கள் பாய்ந்ததால் நீராகாரமும் கூட அருந்தமுடியா

(10 பக்கம் பார்க்க)

### தமிழ்ப்பகுதி வன்முறைகள்

## அடையாள உண்ணாவிரதம் நடத்த பல்கலைக்கழக மாணவர் அவை முடிவு!

[யாழ்ப்பாணம்]

சமீபகாலங்களில் தமிழ்ப்பகுதிகளிலும் இலங்கையின்ஏனைய பகுதிகளிலும் தொடர்ச்சியாக இடம்பெறும் படுகொலைகள் மற்றும் ஏனைய அசம்பாவிதங்களைக் கண்டித்துயாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அவை அடையாள உண்ணாவிரதமொன்றை நடத்த தீர்மானித்துள்ளது

இந்த உண்ணாவிரதம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 21ம் திகதியன்று இலங்கையின் அனைத்துத தமிழ்ப் பகுதிகளிலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை விடுத்துள்ள அறிக்கை வருமாறு: சமீப காலங்களில் தமிழ்ப்பகுதிகளிலும், மற்றும் இலங்கையின் சில பகுதிகளிலும் பயங்கரவாதிகளின் பெயரால் அப்பாவி மக்கள் மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் கொலை, கற்பழிப்பு, மானபங்க நடவடிக்கைகளுக்குள்ளாகி வருகின்றனர்.

இத்தகைய மனிதாபிமானமற்ற செயல்களைக் கண்டிக்கவும், இவற்றுக்கெதிராக நாகரீக மக்களின் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தவும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கையின் சகல தமிழ்ப்பகுதிகளிலும் உண்ணாவிரதமிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு வைத்தியசாலை, போக்குவரத்து தவிர்ந்த சகல

(10-ம் பக்கம் பார்க்க)

### தியத்தலாவையில்

## தமிழ் நில அளவை பயிற்சி மாணவர் மீது தாக்குதல்

[தியத்தலாவை]

நில அளவையாளர் பயிற்சி பெற்றுவந்த 14 தமிழ் மாணவர்கள் பலத்த தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படுகிறது.

படுகாயங்களுக்குள்ளான இம்மாணவர்கள் இப்பொழுது பண்டாரவளை பொலிஸ்நிலையத்தில் பாதுகாப்பில்வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரவளையில் சிறுசிறு அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அறியப்படுகிறது. [மா]

### பதவிநீக்கப்பட்டவர்

## தொண்டாவை பதவி நீக்கக் கோருகிறார்

(கொழும்பு)

கிராமியத் தொழில்துறை அமைச்சர் திரு. எஸ் தொண்டமானை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரும் கடிதம் ஒன்றை முன்னாள் பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்ணாண்டோ ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்ஸிடம்கையளித்துள்ளார்.

நெவில் பெர்ணாண்டோ பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை ஒன்று தொடர்பாக எம். பி பதவியிலிருந்து நீக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

★ "ஒழுக்கமின்றிப் படைகள்

# பயங்கரவாதத்தை முறியடிக்க முடியாது!"

### ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

"போராயினும் சமாதானமாயினும், பாதுகாப்புப்படையினருக்கு ஒழுக்கம் மிகமுக்கியமானதாகும் ஒழுக்கமற்ற நடவடிக்கைகள் மூலம் எந்த ஒரு பயங்கரவாதச் செயலையும் முறியடிக்கமுடியாது" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

திரு. ஜயவர்த்தன நேற்று சப்புகஸ்கந்தயில் புதிய பொலிஸ் நிலையமொன்றை திறந்து வைத்தார். அப்பாதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "அண்மையில் அநுராதபுரத்தில் இடம்பெற்றுள்ள அசம்பாவிதங்கள் பாதுகாப்புப் படைகளால் கடந்த சில மாதங்களாக வடபகுதியில் சாதாரண மக்கள் கொல்லப்பட்டதற்கான பழிவாங்கும் நடவடிக்கை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எத்தரப்பிலும் அப்பாவிமக்கள் வேண்டுமென்றே கொல்லப்படுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

"கட்டுப்பாட்டுடன் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துதமது மேலதிகாரிகளின் கட்டளை

(10-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

அப்பளம், தோசை, தயாரிப்பதற்கேற்ற உழுந்து மா (OridFlour) கிலோ ரூபா 20/-க்கு பெற்றுக் கொள்ளலாம் M. G. M Stores 777, காங்கேசன்துறை வீதி, and 208, முதலாம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611 /2820

யாழ். விவசாயிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட 'பூனா சிவப்பு' ரக பம்பாய் வெண்காயவிதை, சிறீமகள்றேடேர்ஸ் 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் விநியோகம் செய்யப்படுகின்றது. சிறுதொகை மட்டுமே கிடைக்கப்பெற்றதால் விவசாயிகள் உடன் தொடர்பு கொண்டு தேவைக்கேற்ப கொள்வனவு செய்யவும் இதன் விலை கிலோ ரூபா 260/-ஆகும். 3314

அண்மையில் வெளிநாடு செல்லவிருக்கும் பொறியியலாளர் குடும்பத்தில் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி யதினி பத்மன் C/o Mrs P. நடராசா, இன்சூரன்ஸ், கொக்குவில் ஸ்ரேஷன் றேட், மருத்துவக் கல்லூரிக்கு அருகாமையில், திருநெல்வேலி. 3331

எலக்றிக் வெல்டிங் உபகரணங்களும், துருத்தி, பிடிச்சுராவி கட்டரும் விற்பனைக்கு உண்டு 185/1, துர்க்காஸ், கின்னர் லேன், கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம். 3325

மொரிஸ் மைனர் 4 Sri நல்ல நிலையிலுள்ள 27'' Sony Trini Tron கலர் T.V N. V. 2000 நஷனல் வீடியோ Sisil Fridge 8 Cu Ft உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். 121A, ரெம்பிள் றேட், நல்லூர், யாழ்ப்பாணம். 3296

மிக நல்ல நிலையில் பாவனையில் உள்ள N V 300 EN டெக் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; ஸ்கைறேஸ் எலக்றேன்ஸ், 1. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3320

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, மின் உபகரணங்கள், மற்றும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். K. சோமசுந்தரம் (Hospital Secretary), திருஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை 3328

CD 50 Honda மோட்டசைக்கிள் Oven மின்சார பாவனைப்பொருட்கள் Three in one ரேடியோ செற் Baby Items. உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு: நா. ஸ்ரீதரன், கிருஷ்ண வாசம், டளியங்காடு [illegible] பிள்ளையார் கோவில், ஒழுங்கை, ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மை. 3334

## தேவை

பிடவைக்கடை அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர் உடன் தேவை. அண்மையில் இருப்பவர் விரும்பத்தக்கது. ச. சிவஞானம். அஜந்தாஸ், 54, பெரிய கடை, யாழ்ப்பாணம். 3329

முற்பணம் கட்டக்கூடிய வரும் சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடியவருமான விற்பனையாளர் தேவை. சம்பளமும், கொமிஷனும் வழங்கப்படும். விக்னேஸ்வரி இன்டஸ்ரீஸ். 166/2. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3337

தரமான ஆங்கிலம், இந்தி, தமிழ்த் திரைப்பட வீடியோ கசட் வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். ஸ்ரான்லி பேர்ணிஸிங் பலஸ், 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3336

## வாடகைக்கு

யாழ் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் 2 அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட தனியாக அமைந்த மேல் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: திருமதி கனகரத்தினம் 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22157 (3330)

## சோதிடம்

Astrologer and Palmist தங்கள் பெருமுயற்சிகளான பிறநாட்டுப் பிரயாணம், தொழில் வாய்ப்பு, கல்விப் பிரச்சனைகள், காதல், கல்யாணம், சிறப்பான திருமணப் பொருத்தங்கள் மற்றும் தேவைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனை பெற நாடுங்கள் எந்நாளிலும் எந்த வேளையிலும் மாலை ஐந்து மணிவரை. இராசேந்திரன், 'திருவுளம்', பிறெஸ் லேன் ஸ்ரேசன் றேட், கொக்குவில். 3327

## மணப்பந்தல்

கௌரவமான யாழ்ப்பாண இந்து உயர்குலப் பெற்றோர் தமது ஒரேமகளான அழகிய 26 வயதுடைய பட்டதாரிப் பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். மணமகன் 5'7'' உயரத்துக்கு குறையாதவராகவும், முழுமையான கல்வித்தகமை பெற்ற உயர் தொழில் புரிபவராகவும், தீய பழக்கங்கள் அற்றவராகவும் 32 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். சீதனமாக யாழ்ப்பாணமாநகரசபை எல்லைக்குள் பாதுகாப்பான இடத்தில் விசாலமான நவீன வீடு வளவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் பயிர் செய்யக்கூடிய காணியும், ரொக்கமும் நகையும் கொடுக்கப்படும் விபரங்களுக்கு விளம்பர இல: 3326 மே/பா, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3326

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

காரைநகர்

## அகதிகளுக்கு ஆச்சிரமம் உதவி

(சுழிபுரம்)

காரைநகர் பகுதியில் பாதிப்புக்குள்ளாகிய அகதிகள் யாவருக்கும் உணவு வகைகள் வழங்க அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம நிர்வாகிகள் முன்வந்துள்ளனர் ஆச்சிரம நிர்வாகிகள் வட்டுக்கோட்டை அகதிகள் முகாம் காரைநகர் அகதிகள் முகாம்களை பார்வையிட்டு, காரைநகர் பிரஜைகள் குழு மூலமாக உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். தொல்புரம் இ. துரையப்பா அன் சன் மூலமாக உணவுப் பொருட்கள் யாவற்றையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சகல ஏற்பாட்டையும் ஆச்சிரமச் செயலாளர் திரு. வே. கனகநாயகம், என் சண்முகசுந்தரம் ஆகியோர் செய்து வருகின்றனர்.

## கொலை வழக்கில் எதிரி விடுதலை

(பண்டத்தரிப்பு)

உடுவில் கொலை வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். உடுவிலிலுள்ள சுப்பிரமணியம் என்பவருக்கு சொந்தமான பேக்கரி ஒன்றில் வேலை செய்து வந்த பொன்னுச்சாமி ரவிரஞ்சன் என்பவரை கடந்த 1980-ம்ஆண்டு ஜூன் மாதம் 10-ம் திகதியன்று கழுத்தை நெரித்துக் கொலை செய்ததாக இந்திரபாலன் என்பவர் மீது குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கின் விசாரணை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது. எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி க. குணரத்தினம் இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக சாட்சியம் எதுவும் இல்லை என்றும், அரசாங்க ரசாயன பகுப்பாளரின் அறிக்கையிலும் எதுவித தடயமும் இருக்கவில்லை என்றும் பேக்கரி முதலாளியை இவ் வழக்கில் ஒரு எதிரியாக்க பொலிசார் தவறிவிட்டனர் என்றும் வாதிட்டார்.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

## மின் விளக்குகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணப்)

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த திரு கந்தையா வைத்தீஸ்வரன் வண்ணை, சாந்தையர்மடம் கற்பகவிநாயகர் ஆலயத்திற்கு இரண்டு மின்சார சட்டவிளக்குகளை அன்பளிப்புச் செய்துள்ளார். இவை கர்ப்பக்கிருக வாசலிலும் அர்த்தமண்டப வாசலிலும் அமைக்க பெற்றுள்ளன.

அன்பளிப்புச்செய்த இவர் ஒரு படப்பிடிப்பாளரும் பிறவிச் செவிடருமாவார்.

## WANTED

Wanted a room for private tuition by a Graduate teacher. Only one student at a time No noise no disturbance to others of the house Advt: No: 3305 C/o Eelanadu Jaffna. 3305

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை ஞான சம்பந்தர் வீதியில் நல்ல தண்ணீர் உள்ள 2 நிலப்பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ சிவபாலன், சட்டத்தரணி, சித்தன்கேணி. 3315

உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் வைகாசி மாதம் 9ம் நாள் 22-5-1985 புதன்கிழமை பகல் 9-40 மணி முதல் 11-36 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| திருநிறை செல்வன் **பரமேஸ்வரன்** (இலங்கை வங்கி, புறக்கோட்டை) அவர்களுக்கும் | திருநிறை செல்வி **சாந்தினி** அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருவருள் நலங்கொண்டு திருமணவைபவம் நிகழப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், சுற்றம்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி இராசதுரை. திரு. அ.சுப்பிரமணியம்
தாவடிவடக்கு. கொக்குவில். (தந்தை)

திரு. திருமதி. அப்பாத்துரை (பேரன் பேத்தி)
''சொர்ணவாசா''
நீர்வேலி வடக்கு. நீர்வேலி.

(3318)

ஈன்றவள் பிரிந்த

## 31வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி இ. நாகரத்தினம்

மலர்வு: 23-12-1935 உதிர்வு 20-04-1985



எம்மையெல்லாம் ஆறாத்துயரில்ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அந்தியேட்டிக்கிரியை 20-05-1985 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவுத்துயரால் வாடும்

கருவேலடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

கணவன், பிள்ளைகள், மருமகன், உறவினர்கள், நண்பர்கள்.

3277

## பேர்லின், இங்கிலாந்து மற்றும் நாடுகளுக்கு செல்ல வேண்டுமா?

1. பிரயாணத்துக்கான ஆலோசனைகளும் பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2. யாழ்ப்பாணத்தில் இருந்து BERLIN வரை எங்கள் பிரதிநிதி கூட்டிச் செல்வார்.

S. VARAN
THUNALI SOUTH
KARAVEDDY.

தொடர்பு

S NESAN
127, BANKSAL STREET,
JAFFNA.

COLOMBO / BERLIN
ஒரு வழி 14,000/-

யாழ் மரியாஹோட்டலுக்கு அண்மையில் உள்ளது.

3323

## மருத்துவ அதிகாரி தேவை

1983ல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிர்மாணிக்கப்பட்டு வரும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குள ஜெயபுர குடியேற்றத் திட்டத்தில் தங்கியிருந்து சேவை செய்ய ஓய்வு பெற்ற R M. P. தரத்திற்குட்பட்ட மருத்துவ அதிகாரி தேவை.

இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

எதிர்பார்க்கும் வேதனத்துடன் நற்சான்று பத்திரங்களுடன் 31-5-85ற்கு முன் விண்ணப்பிக்க.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

மாவட்ட இணைப்பாளர்,
சர்வோதயம்,
வவுனியா.

3339

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# அமரகவியின் ஆங்கிலப்புலமை

கே எஸ். நாகராஜன்

அமரகவி பாரதியார் தமிழில் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார் என்பது யாவரும் அறிந்ததே. ஆனல் அவர் ஆங்கிலத்திலும்கவிதை, கட்டுரைகள் எழுதினர் என்பது அநேகருக்கு ஆச்சரியமாகத் தோன்றும். 'அக்கினி' முதலிய பாடல்கள், மொழிபெயர்ப்புகள், கட்டுரைகள், என்ற தலைப்பில் பாரதியாரின் ஆங்கில எழுத்தோவியங்கள் தொகுக்கப்பெற்ற 1937-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. அந்த நூலின் அளவு நூறு பக்கங்களே. எனினும் அதை ஊன்றிப் படிப்போர் 'பாரதி இன்னும் நிறைய ஆங்கிலத்தில் எழுதவில்லையே!' என்று வருத்தமடைவர்.

குணரமுடிந்தது. இதே போன்று ஆழ்வார்களின் அழகான பாடல்கள் சிலவற்றையும் ஆங்கிலத்தில் வசன கவிதைகள் ஆக்கித் தந்துள்ளார். அவர்கள் கருத்துக்களுடன் ஒன்றி அவற்றைத் தமதாக்கிக் கொண்டு பின்னர் அவற்றைத் தமக்கே உரியநடையில் அவர் வெளியிடும்போது அவை புதுப் பாடல்களாகவே தோன்றுகின்றன. இதுவே நல்ல மொழிபெயர்ப்பாளன் செய்யும் இரசவாதமாகும்.

தமிழ்ச் சொற்களுக்கும் பொருந்தும் வகையில் விதி ஒன்றையும் அவர் உருவாக்கவில்லை. பாரதியின் ஆங்கில நடை எளியதாகவும், அழகாகவும் இருக்கிறது என்றுலும் அவருடைய கொள்கையை நாம் ஒப்புக்கொள்ள முடியாது இலக்கியம்படைத்த மொழிகள் எல்லாவற்றிலும் சொற்கள் பலதரப்பட்ட பொருள்கள் அடுக்கடுக்காப் பெற்றுள்ளன. இதற்கு பாரதி மேற்கொண்ட ஆங்கிலச்சொற்களே சான்று பகரும். ஆகவே இதைத் தமிழின் தனிச்சிறப்பு என்றுகூறமுடியாது இதுபற்றி தம் கருத்துக்களை விரித்துப்பல கட்டுரைகளை எழுதப்போவதாகப் பாரதியே அறிவித்திருக்கிருர். ஆனல் நம்முடைய துரதிருஷ்டம் அந்தக் கட்டுரைகள் வெளிவரவில்லை.

தாகூரைத் தமக்கு முன்மாதிரியாகப் பாரதியார் கொண்டார் என்று சொன்னல் தவருகாது. தாகூர் தம் மொழியான வங்காளியில் கவிதைகளையும் கட்டுரைகளையும் முதலில் எழுதினர். எனினும் அவற்றில் பலவற்றைத் தாமே ஆங்கிலத்தில்மொழிபெயர்த்து வெளியிட்டார். அவ்வாறு செய்யவேண்டும் என்ற அவா பாரதிக்கும் எழுந்தது. ஆகவே தாம் இயற்றிய தமிழ்ப்பாடல்களில் சிலவற்றை ஆங்கிலப் பாடல்களாக மொழிபெயர்த்தார். கவிதைத் துடிப்புடன் படிப்போர்க்குப் பேரின்பம் தருவனவாக அவை அமைந்துள்ளன. மற்றவை வசன கவிதைகளாய் உருப்பெற்றுள்ளன. ஆழ்ந்த கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளியிட முயற்சி செய்யும் போது யாப்பு விதிகளுக்கு உட்பட்டு உழலாமல் வெற்றி காண இது சிறந்த வழி என்பதை நிரூபித்துக் காட்டினர் பாரதி.

அவருடைய ஆங்கில எழுத்தோவியங்களை ஐந்து பகுதிகளாய்ப் பிரிக்கலாம். (1) அவர் பாடிய தமிழ்க் கவிதைகளின் மொழிபெயர்ப்பு (2) வேதங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட தோத்திரங்கள், ஆழ்வார்களின் சில பாடல்கள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பு, (3) அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் அவருடைய கருத்துக்களை வெளியிடும் கட்டுரைகள், (4) அவருடைய குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்டபகுதிகள் (5) தமிழ்சொற்களைப் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை என அவை அமையும்.

வேதங்களிலுள்ள சில தோத்திரங்களை ஆங்கிலப் பாடல்களாகப் பெயர்த்திருக்கிருர் பாரதி. அதற்கான வடமொழி அறிவு அவருக்கு இருந்தது. சிறுவயதிலேயே காசி நகரிப் புலவர்கள்பேசும் முறைகளைக் கேட்டு வடமொழியை நன்ருகப் பயின்ற காரணத்தால் அந்தத் தோத்திரப் பாடல்களின் பொருளை நன்

பாரதி எழுதியுள்ள ஆங்கிலக்கட்டுரைகள் அவ்வப்போது இருந்த அவருடைய மனநிலைகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. தேசியம், அரசியல், சமூகம், தத்துவம், சமயம் ஆகிய பல துறைகளில் அந்த நாளில் உலவிவந்த கருத்துக்களையும் அவற்றில் எவை பாரதிக்குப் பிடித்திருந்தன. என்பதையும் இக்கட்டுரைகளிலிருந்து நாம் அறியலாம்.

## தாகூரை முன் மாதிரியாகக் கொண்டவர்

பாரதியாரின் குறிப்புகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில கருத்துக்களை ஒரு தனிப்பகுதியில் காண்கிறேம். மிகவும் சுருக்கமாகச் சொல்லி ஆழ்ந்த கருத்துக்களைப் புலப்படுத்துவதில் பாரதி அளவற்ற ஆற்றல் படைத்திருந்தார். இதற்கு இப்பகுதி நல்ல சான்றுகும். சில வரிகளைக் காண்போம்;

He is slave who receives favours.

He sells himself who asks.

If you want to die soon talk about yourself.

முரண்பாடுபோலத் தோன்றும் வகையில் சொல்லிக் கருத்துக்களை எளிதில் விளக்கும் முறையை மேற்கொள்கிருர் பாரதி. ''மனம் உண்டு என்ருல் வழி உண்டு. ஆனல், கடவுளே! மனம் உண்டாவதற்கு வழி ஏது?'' என்று கேட்கிருர், தெளிவான ஆங்கில நடையில்.

கடைசிக் கட்டுரை தமிழ்ச் சொற்களைப் பற்றிய ஆராய்ச்சியாகும். ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் மேற்போக்கான நேரடியான பொருள் ஒன்று இருக்கும்; அதோடு மறை பொருள் அல்லது உள்ளுறைப் பொருள் ஒன்றே பலவோ இருக்கும் என்பது பாரதியின் கொள்கை. சில சொற்களைச் சான்ருகத்தந்து தம் கொள்கையை விளக்க முற்படுகிருர் பாரதி. ஆனல் எல்லாத்

இந்த ஆங்கிலநூல் பாரதியாரின் ஆங்கிலப் புலமையை நன்கு புலப்படுத்துகிறது. நூய. தெளிய ஆற்றொழுக்குப் போன்ற நடை, சிந்தித்துத் தெளிந்த கருத்துக்கள், பழையனவும் புதியனவுமான பல ஆங்கில நூல்களில் அவருக்கு இருந்த பயிற்சி ஆகிய சிறப்புக்களுக்குச் சான்று பகர்கிறது இந்நூல். மேலும் அவருடைய ஆங்கில எழுத்துக்கு அடித்தளமாய் இருந்து உயிரூட்டுவது நகைச்சுவையாகும். அறிவும் அழகுணர்ச்சியும் கற்பனையும் கருத்து வளமும் நிரம்பப்பெற்ற பாரதி, உயர்ந்த இலக்கியங்களை ஆங்கிலத்தில் படைத்தார் என்ருல் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அறிவும் அழகும் மொழி, இடம், காலம் ஆகியவற்றைக் கடந்த அழியாத் தத்துவங்கள் அல்லவா?

'கண்ணம்மா என் காதலி' என்னும் தலைப்பில் 'பாயு மொளி நீ எனக்கு' என்று தொடங்கும் பாடலைப் பாரதி கீழ்வருமாறு மொழிபெயர்த்திருக்கிருர்.

Thou to me the flowing light
And I to thee discerning sight;
Honied blossom thou to me,
Bee enchanted I to thee;
O Heavenly Lamp with shining ray,
O Krishna, Love, O nectar -spray
With faltr'ing tongne and words tnat pant
Thy glories hhre, I strive to chant.

(9-ம் பக்கம் பார்க்க)

# நீதியின் நெறியை நிலை நிறுத்துக

அமெரிக்க முதலீட்டுக்குழு இலங்கையில் பத்துநாட்கள் தங்கியிருப்பதாகச் செய்தி.

பத்துக் கைத்தொழில் ஆசிரியர்களைக் கொண்ட இக்குழு எந்தஎந்தக் கைத்தொழில்களில் முதலீடு செய்யலாம் என்பதை ஆராயுமாம்.

இன்று ஜனதிபதி றீகனின் ஆட்சி; சின்ன இலங்கையின் பெரிய நண்பன் றீகன். இன்று இங்கு பரவலாக குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கைத்தொழில் என்ன என்பது ஜனதிபதி றீகனுக்குத் தெரியாதிருக்கலாம்.

இங்கு வடபகுதி ராணுவ ஆட்சிக்குத் தலைமை தாங்கும் தளபதிக்குச்சில கைத்தொழில்சாதனைகள் பேரதிர்ச்சியாகவிருக்கின்றன. ஜனதிபதி ஜெயவர்த்தன அவர்களை அதிசயப்படுமளவிற்கு யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் வளம்பெறுகின்றது.

அமெரிக்க ஜனதிபதி ஜெபர்சன் ஜனநாயக ஆட்சி முறைக்கு தெளிவுரை வழங்கியபோது, பெரும்பான்மையர் முடிவே தீர்வென்ருலும், சிறுபான்மையினர்க்குரிய சமஉரிமைகள் ஒருபோதும் மறுக்கப்படலாகாது என்றும், இன்றேல் அது அடக்குமுறை ஆட்சியென்றும் விளக்கியிருந்தார்; அது நீதியின் நெறியல்லவென்பதை வற்புறுத்தியிருந்தார்.

றீகனின் ஆசிபெற்று இங்கு வரும் முதலீட்டுக்குழு அடக்குமுறைக்குதவும் ஆயுதங்களையும் அவற்றை உபயோகிக்கும் வீரர்களையும் இனங்காண முடியுமாஞல் இலங்கைக் கைத்தொழில் வளத்தின் வளைவுநெளிவுகளை நேரில் அறியமுடியும்.

# கதிர்காமத்தில் தலயாத்திரைக்காகவே இயங்கிய இராமகிருஷ்ணமடம்

கதிர்காமம் புனிதத்தலம் தற்போது பக்தர்களின் அசௌகரியங்களுக்குரியதொரு பிரதேசமாக மாற்றமடைந்து வருகிறது.

இங்கு தங்குவது, உணவுண்பது ஆகியவற்றுடன் வழிபாடுகளை மேற்கொள்வது கூட மனவேதனையளிப்பனவாகவே உள்ளது. இத்தகைய வசதியீனங்கள் காரணமாகச் சாதாரண யாத்திரிகர்கள்படும் அவஸ்தை வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

தகுந்த தங்குமிடமொன்றை இங்கு தேர்ந்தெடுப்பது முதலாவது பிரச்சினை. அறைகளுக்கான கட்டணங்கள் உல்லாசப் பயணிகளுக்குரிய விலைகளில் காணப்படுவதால் சாதாரண மக்கள் ஒரு குடும்பத்துக்குரிய அறையைப் பெறமுடியாதுள்ளது.

இதில் மேலும் கவலையளிப்பதென்னவென்ருல்சிலபௌத்த நிறுவனங்கள் வாடகைக்கு விடும் அறைகள் கூட இத்தகையகட்டணங்களில்காணப்படுவதே!

உல்லாசப் பயணிகளை மட்டுமே எதிர்பார்த்து சகலதங்குமிடங்களையும் ஆடம்பரமான முறையில் வைத்திருப்பதே இந்தக் கட்டண உயர்வுக்குக் காரணமாக இருக்கின்றது. இதனுல் ஒரு சாதாரண யாத்திரிகர் குடும்பமொன்று நியாயமான கட்டணத்தில் தாம் தங்குவதற்கென ஒரு அறையைப் பெறமுடியாதுள்ளது.

உணவு விடயத்திலும் கூட இந்த விலைக்கெடுபிடிகள்! பெருமளவு பணத்தைச் சாப்பாட்டுக்கே செலவளித்துவிட வேண்டியுள்ளது!

இத்தகைய வேதனை தரும் வேளையிலேயே ஒரு சாதாரண கதிர்காம யாத்திரிகனுக்கு 'இராமகிருஷ்ணமிஷன்' மண்டபம் இங்குஆற்றிய சேவை ஒரு பெரும் ஏக்கத்தைத் தருகின்றது.

இராமகிருஷ்ண மடம் எந்த நோக்கத்துக்காக இங்குஅமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் அது இறுதிவரை தாராளமாகவே இயங்கிவந்தது.

டி. பி. கமலத்கே
நுகேகொட

இன, மத, வேறுபாடின்றியும், உயர்வு தாழ்வு இன்றியும் இம்மடம் ஆற்றிய சேவையினுல் கோடிக்கணக்கான சிங்கள, தமிழ் முஸ்லிம் பக்தர்கள் திருப்தியடைந்தனர்.

குறைந்த கட்டணங்களில் தங்குமிடங்கள், இலவச உணவு ஆகியன இம்மடத்தின் சிறப்பம்சங்களாக விளங்கின. தமிழ் சிங்களக் குடும்பங்கள் பயமின்றி ஒரு அறையைக்கூட பகிர்ந்துகொண்டு இம்மடத்தில் தங்கியிருந்த நாட்களும் உண்டு.

அப்போது குறுகிய இன மத வேறுபாட்டு எண்ணங்கள் மிகத் தொலைவில் நின்றன. வசதி குறைந்த யாத்திரிகர்கள் இம்மடத்தின் விசாலமான மண்டபத்தில் தங்கிநின்றனர். அவர்களிடம் கட்டணமெதுவும் அறவிடப்படவில்லை. கூடவே இலவச உணவும் தாராளமாக அவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆனல் இந்த இராமகிருஷ்ணமடம் தற்போது ஒரு 'நூதனசாலை'யாகவுள்ளது. இதைமீண்டும் யாத்திரீகர்களுக்கென உபயோகப்படுத்தலாமென்பதே எனது நம்பிக்கையாகும்.

இந்நிலையில் இராமகிருஷ்ண மிஷனரியினரிடம் இம்மடத்தை மீண்டும் பொறுப்பேற்கும்படி வேண்டுகிறேன். முன்புபோலவே இதனை நடத்தி தமிழ்-சிங்கள சௌஜன்யத்தை பேணும் ஒரு நிலையமாக இதனை மாற்றவேண்டுமெனவும் விரும்புகிறேன்.

இவ்விருப்பங்களைக்கதிர்கடவுள் மீது வழிபாடாகவும் சமர்ப்பித்து இந்நாட்டின் தற்

(9-ம்பக்கம் பார்க்க)

## எமது சிறுகதை

# நாலு நாட்கள் கொண்டாட்டம்

★ 'கதிரொளியான்'

1



உ

சிவமயம்

### பூப்புனித நீராட்டுவிழா

### அழைப்பிதழ்

திரு/திருமதி.......................................

அன்புடையீர்,

நிகழும் இரத்தாஷி வருடம் ஐப்பசித்திங்கள் 22ம் நாள் (0்-10-1984) இரவு 11-00 மணி தொடக்கம் 1-00 வரையுமுள்ள சுபவேளையில்,

எமது புத்திரி திருநிறை செல்வி

**எழிலிற்கு**

மஙகள நீராடி ருது சாந்தி செய்யப்பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(கொண்டாட்டம் நாலு நாட்கள் வரை நடைபெறும்)

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
**கணபதி தம்பதிகள்**

தெல்லிப்பழை.

(2)

"அம்மாஅ... அம்மாஅ... அக்காவுக்கு என்னம்மா நடந்திட்டுது? எங்களோடை கெந்தித்தொட்டு விளையாட, எட்டுப்பாத்தி விளையாட, பாண்டு விளையாட.... ஒன்றுக்குமே வருகிறாவில்லை...''- மஞ்சு

'அக்கா பெரிய எழுப்பம் விடுகிறா அம்மா... முசுப்பாத்தி விட்டாக் கூட சிரிக்கிறாவில்லை..." - குஞ்சு.

இப்ப எல்லாம் எங்களோடை அவ்வளவு நல்லாக் கதைக்கிறாவில்லை. அவவுக்குப் பெரிய இது..." அப்பன்.

"அம்மாஅ... அக்காவுக்கு என்னம்மா. சொல்லுங்கோ அம்மா..." - மஞ்சு; குஞ்சு; அப்பன்.

மஞ்சு, குஞ்சு, அப்பன்... இப்படியான தொரு 'அனுமான் வால்' போன்ற நீண்ட பட்டியலுக்கு உரியவர்கள் கணபதி தம்பதிகள்.

கேள்விக்கணைகளால் பாக்கியம் திணறிப்போனாள் என்ன சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

"நீங்கள் சின்னப்பாப்பாக்கள்... உங்களுக்கு விளங்காது... அங்கை அப்பா மரத்தோடை வாழைக்குலைகள் கொண்டுவாறார்; படலைக்குக் கட்டப்போறார். போய்ப் பாருங்கோ...!" என்று கதையை மாற்றித் திருப்பி விட்டாள் அவள். மஞ்சு விடுவதாக இல்லை. பாக்கியத்தின் முந்தானையை இழுத்துப் பிடித்து திரும்பத் திரும்ப அதையே கேட்டாள்.

அகாவுக்கு...

"முற்றத்திலே பாலை, சட்டிகள் கழுவிக் கொண்டிருந்த செல்வம் சரேலென ஓடிவந்து தனது கரிபடிந்த கையினால் மஞ்சுவின் தலையில் இரண்டு குட்டுக் குட்டி மறுகையினால் வாயைப் பொத்தியவாறே உள்ளுக்கு இழுத்துச் சென்றாள். செல்வம் பாக்கியத்திற்கு மூத்தவள்; முதலாம் இலக்கத்திற்கு உரியவள். மஞ்சுவின் இலக்கம் பன்னிரண்டு. அளவு கணக்கின்றிப் பிள்ளைகள் இருந்ததனால் வசதியை முன்னிட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலக்கத்தை கணபதி வழங்கியிருந்தார். இன்னும் இலக்கங்கள் உண்டு எனப்பாக்கியம் பெருமிதமுமடைகின்றாள் அதன்படி பன்னிரண்டாம் இலக்கத்தை முதலாம் இலக்கம் சிணுங்கச் சிணுங்க இழுத்துச் செல்வதைச் சகிக்கமாட்டாத தாத்தா, பாக்கு இடிப்பதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தார்.

"செல்வம்... குழந்தையை அடியாதை... என்னட்டை விடு நான் சொல்லுறன்..." என்றார்.

சுதந்திரமாக விடுபட்ட மஞ்சு, 'தாத்தா' என முக்கி முனகியவாறே ஓடிச்சென்று தாத்தாவைக் கட்டிப்பிடித்து கன்னத்திலே முத்தமிட்டாள். தாத்தா 'செத்தேன் சிவனே' என்று பாக்குரலுடன் சரிந்து விழுந்தார். உரலுக்குள்ளிருந்த 'பாக்கு' ஒன்று மறுபிறவி எடுத்து வெளியே உருண்டு ஓடி ஒளித்துக்கொண்டது.

"பார்... பாப்பா... பக்கத்து வீட்டு இந்திராக்கா போன வருஷம் என்ன சட்டை போட்டிருந்தா? பாவாடை சட்டை தானே! இப்ப சீலைதானே உடுத்திருக்கிறா...! அதேபோல அக்காவும் இனிமேல் சீலை தான் உடுப்பா...

அக்காவுக்கு இண்டைக்கு கலியாணம்..'' என்றார், பாக்கு வெற்றிலைபோட்ட 'பொக்கை' வாயை அசைத்தவாறே, தாத்தா.

"அப்பயாரு மாப்பிள்ளை...! பக்கத்துவீட்டு நந்தன் மாமாவா?" கால்கள் இரண்டையும் ஒன்றுசேர மடித்துக் கதைகேட்கும் தோரணையில் வாயைச் சுழித்துக் கேட்டாள் மஞ்சு. தாத்தாவுக்கு சிரிப்பு வந்தது.

"இப்ப அக்காவுக்கு சின்னக் கலியாணம்.... பெரிய கலியாணம் பிறகுதான் நடக்கும்" என்றார் தாத்தா.

மஞ்சு எழுந்தாள். புரிந்த வளர்பால அந்தத வளவை நோக்கி கெந்திக்கெந்திச் சென்றாள்.

அங்கிருந்தபடியே, 'தாத்தா பெரிய கலியாணம் எப்ப தாத்தா நடக்கும்?' என்று பலமாகக்கேட்டாள்.

எல்லை வேலிகளற்று, வரப்புகளையே எல்லையாகக் கொண்ட பிரதேச மாகையினால்.... அது தட்டிக்கு அப்பால் குழைஒடித்துக்கொண்டு நின்ற செல்வத்தின் காதுகளில் பொதுக்கென விழுந்தது.

அவளுக்கு வயது முப்பத்திரண்டு. இப்படியான கொண்டாட்டங்கள் இங்கு எல்லாப் பெண்களுக்கும் வேளை தவறாமல் நடைபெறும். பெரும்பான்மை பெண்களுக்கோ அது தான் முதலும் கடைசியுமாகும். கலியாணம் எதுவும் பிறகு நடந்ததாகச் சரித்திரத்தில் இல்லை. பருவங்களை யெல்லாம் கடந்து விடுபட முடியாதவளாகிப்பேரிளம் பெண்ணாக இருக்கின்ற செல்வம், தட்டிக்குமேலால் தாத்தாவை எட்டிப் பார்த்தாள். தாத்தா அவளுக்கு மேலால் தெரிந்த 'கொக்கைச் சத்தகத்தைப்' பார்த்தார்.

3

வடக்கு தெற்குமுகமாக நீண்ட பந்தல். அந்தங்களில் எதிரெதிராக ஒன்றையொன்று நோக்கிய வண்ணம் இரண்டு மணவறைகள் உள்ளன. தோரணங்கள் பந்தலுக்குள் கட்டப்பட்டுள்ளன.

ஒலிபெருக்கியில் பாடல்கள் நிறுத்தப்பட்டு, தவில் கச்சேரி ஆரம்பமானது. நாதஸ்வர, தவில் வித்துவான்கள் இதுவே தமக்குக் கிடைத்த தருணம் என எண்ணித் தமது கைவரிசையைக் காட்டினர். இளைஞர் கூட்டமென்று மெட்டிற்கு ஏற்ப 'பைலா' போட்டுக் கொண்டிருந்தது

எழில் தோயவார்க்கப்பட்டு, சிவப்புநிறக்கூறைச்சேலையுடன் தங்கப் பதுமைபோல மெல்லென அடியெடுத்து, புதிய வாழ்க்கையில் பூத்த மலராக பந்தலுக்குள் நுழைந்தாள். தோழிகள் அவளைச் சீண்டியவாறே அழைத்துவந்து மணமேடையில் அமர்த்தினார்கள். புகைப்படப் பிடிப்பாளர்கள் 'கிளிக் கிளிக்' எனப் படங்களை எடுத்தனர். வித்துவான்களும் ஒட்டகச்சிவிங்கிகள் போலத் தலையை நீட்டிக்கொண்டனர்.

பரந்தவட்டமுகம்-கயல்விழிக்கண்கள்வில்போலும் வளைந்த புருவங்கள்- எடுப்பான மூக்கு- சிவந்த ஈரஞ்சொட்டும் இதழ்கள்- குழிவிழும் கதகதப்பான கன்னங்கள்- நெற்றியை மூடிய சுருண்ட கேசங்கள் - பெயருக்கேற்றவாறு அழகிதான். அப்பெண்பாவை தனிமைப்பயத்தினால் தேவலோகக் கன்னிகள் புடைசூழ, நாணத்தினால் கால் விரல்களினால் மணலைக் கீறியவாறே நிலம்பார்த்துக்கொண்டிருந்தாள் எழில். ஆசையைக் கிளறிவிடும் இளமைப் பருவ மாதலால் வாயைப் பிளந்தனர் இளைஞர்கள் தம்கள்ளப் பார்வையினாலும் சிரிப்பினாலும் ஜாடை புரிந்தனர். அவர்கள் கிள்ளைஞ்சிறுகள் முன்வரிசையில் அமர்ந்து இமைக்காமல் எழிலைப் பார்த்தனர். அவள் மன்னுவியாதி கண்டவர்களைப் போல் பயந்த பிரமையிலிருந்தாள்.

இப்பொழுதெல்லாம் எழில் நல்லா மாறிப்போனாள்''-பாக்கியம் குசினிக்குள் யாருக்கோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

மஞ்சு முன்வரிசையில் அமர்ந்து தன்சகபாடிக்கு இரகசியம் சொன்னாள் எழில் உதட்டிற்குள் புன்முறுவல் ஒன்று பூத்தாள். ஒடிச்சென்ற மஞ்சு.

"அக்கா... நீ பெரியமனிசியாயிட்டியாம். தாத்தாசொன்னவர் என்னை ஒரு படத்துக்குக் கூட்டிக்கொண்டுபோறியா அக்கா..." என்றபடி எழிலின் மடிமீது ஏறி அமர்ந்தாள்

"நாளைக்கு இரவு சின்னமேளம், கோலாட்டம், நாளையிண்டைக்கு வில்லுப்பாட்டு. அரிச்சந்திரா மயானகாண்டம் நாடகம், அதுக்கடுத்த நாள் விடிய விடிய டி. வி. படக்காட்சி....."- நிகழ்ச்சி நிரலை விரிவுபடுத்தி வந்திருந்தவர்களுக்கு விளக்கிக்கொண்டிருந்தார் கணபதி.

"ஆக நாலு நாட்கள்தான் கொண்டாட்டம் வைக்கப் போறம்" என்றார் இறுதியில் அழாக்குறையாக, புனிதமான சடங்கை வியாபாரமாக ஆக்கிவிட நினைத்தார் கணபதி.

நாலைந்து நாட்களாகத் தவறணைக்கும் வீட்டிற்குமாக இரவுபகல் மாறி மாறி நடந்ததில் 'சீ' என்றுகிவிட்டது அவருக்கு.

"அந்தக் காலத்திலே தம்பி ...எனக்குப் பதினறு வயசிலே கலியாணம் நடந்தது அப்ப... நான் ஒரு குதிரை வண்டியிலே ...எங்கடை பொன்னு ஒரு குதிரை வண்டிலிலே அப்பிடித்தான் கோயிலுக்கும் போனனாங்கள்..." - தாத்தா ஒரு மூலையிலிருந்து பழங்கதைகளைப் பேசிப் பெருமிதமடைந்து கொண்டிருந்தார்.

வானத்திலே எலி, சக்கர, ராட்டின வாணங்கள் சீறிப் பேரொளியை உண்டுபண்ணின. நமது சமூதாய வாழ்வில்தான் சடங்குகள் எவ்வளவு இன்றியமையாதவை? கச்சேரி முடிந்தவுடன் உறவினர்கள் கூட இன்று எழிலை வாழ்த்தினார்கள். சோடியாகவும் தனியாகவும் குடும்பத்துடனும் நின்று எழிலுடன் படம்பிடித்தனர். எழில்நிறைகுடத்துடன் வாலிபப் பெண்ணாகி நின்றாள்.

வாழுகின்ற, வாழப்போகின்ற சமுதாயம் வஞ்சிக்கப் படவோ, வருத்தப்படவோ கூடாதென்றும், அதனால் 'குடியை விட்டுவிடும்படியும் பலர் கணபதிக்குப் போதித்தனர்.

இப்பொழுது 'தகரடப்பாச்' சத்தத்துடன் ஒரு இளைஞனும் யுவதியும் மாறி மாறிப்பாடினார்கள். பனை வடலிக்கும் அப்பால் நாலைந்துவீடுகள் தள்ளி இருந்த பாக்கியத்தின் அண்ணரான சோமுவைப் பேணிகளின் சத்தம் இருப்புக் கொள்ளவிடவில்லை. தனதுமகளுக்குநடந்த கொண்டாட்டத்துடன் ஒப்பீட்டு ரீதியில் தோற்றுவிட்டதாக உணர்ந்தார். அவர்மனம் புழுங்கி அவிந்தது.

"உவனுக்கென்ன காசு குடுப்பு!"- 'சும்மா' போய்வரலாமென நாரதவடிவெடுத்துப் புறப்பட்டார் சோமு.

சோமுவீட்டிற்குவந்தபோது நன்றாக உபசரித்தாள் பாக்கியம். ஏன், கணபதிகூட ஒழுங்கு முறை தவறாமல் வரவேற்றார். ஆனல் ..சோமு திருப்பிப் போகும் போதுதான் 'பிரளயம்' தொடங்கியது.

"என்ன பாக்கியம் உன்ரை அண்ணர்...சும்மா வந்துட்டுப் போறார். நான் கொடுத்த 100 ரூபா...? அதுஅப்ப...இப்ப அதுவரை பெறுமதி தெரியுமோ...? உதுக்கு ஒரு முடிவு கண்டிட்டுத்தான் மறுவேலை"- சீறினார் கணபதி

இதை எதிர்பார்த்து வந்த சோமு கண்டபடி தூஷணை வார்த்தைகளினால் கணபதியைத் திட்டித்தீர்த்தார்.

"நீ எனக்குக் காசு தரவும் இல்லை; நான் உனக்குத் தரப் போறதும் இல்லை" என்று சோமு முடிந்த முடிபாக வீரப்பிரதாபத்துடன் கூறினார் சரமாரியாக இருவரும் வாக்குவாதப்பட்டனர். பாக்கியம் நடுவளாக நின்று இருபக்க அடிகளையும் தனதாக்கிக் கொண்டாள்

வெளியே சத்தம்கேட்டு முற்றத்திற்கு வந்தாள் எழில். அங்கே பந்தல், மணவறை எல்லாம் சரிந்து கிடந்தன.

"சடங்குகள், சம்பிரதாயங்கள் எண்டபோர்வையிலே நீங்கள் அதிலை வாற இலாபத்திலை தான் குறியாயிருக்கிறியளே யொழிய உங்கடை பிள்ளையளைப்பற்றியோ அதுகளின்ரை எதிர்காலம் பற்றியோ சிந்திக்கிறியளில்லை. அதுகளைப்பற்றி உணருகிறகாலம் வரும்போது தான் நமது சமுதாயம்சீர்திருந்தும்.

"ஒருநேரச் சாப்பாட்டிற்கே வழியில்லாத எங்கடை சமுதாயத்திற்கு உதகள் தேவையில்லை. விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டாதை..." -வசைமாரி பொழிந்தவாறே விழுந்துகிடந்த சோமு எழும்பிப் போனார்.

உறவினர்கள் பாக்கியத்திற்கு ஆறுதல் சொல்லித் தேற்றினர். எழிலின் அழகு முகத்தில் கருமேகம் கவிந்தது. அறை வாசலில் கட்டியிருந்த வேப்பிலை...பேய், பிசாசுகள் பிடியாமல் காவல் செய்த இரும்பாணி... எரிச்சலாக வந்தது அவளுக்கு எல்லாரும் வந்து கதவடியில் எழிலைப் பார்த்தனர். அவள் அழுதபடியே முகட்டைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"பாக்கியம் ... நான் எப்ப வருவன் எண்டு சொல்லமுடியாது த...த...த...வுக்குப் போட்டுவாறன்....''- கோபம் தணியாமல் வெளியேறினார் கணபதி. எல்லாரும் ஆளுக்கொரு மூலையாகப் பார்த்து படுத்துக்கொண்டனர்.

4

விடிந்து விட்டது; புகைவண்டியொன்று தரிப்பிடத்தில் நின்று ஒசை எழுப்பிவிட்டுச் சென்றது பாக்கியம் எழுந்து எண்ணெய் விளக்கைத் தூண்டி விட்டுப் படலையைப் பார்த்தாள். வாழைக்குலைகள் இரண்டையும் மாடுகள் சரித்து விழுத்தி... அழகானதொரு காட்சி...!- கணபதி கொட்டிலுக்குள்ளிருந்து உருண்டு உருண்டு வேலியருகே வாழை மரமொன்றைக்கட்டிப்பிடித்தபடி படுத்திருந்தார்.

எழிலின் அறைக்குள் எட்டிப்பார்த்த பாக்கியம் 'ஐயோ ..'' எனப் பிலாக்கணம் பாடத்தொடங்கிவிட்டாள். அங்கே பரிணாமத்தின் உச்சக்கட்டம் ஒன்று நிகழ்ந்திருந்தது. அவ்வழியே பால்வாங்கிக்கொண்டு வீடுசென்ற சோமு, கணபதி வீட்டிலேயே துவிச்சக்கரவண்டியை மெதுவாக நிறுத்தி, மீண்டும் விரைவுபடுத்தினார்

"ஐயோ! என்ரை மகளே!... எங்களையெல்லாம் விட்டிட்டுப் போட்டியா...?" பாக்கியம்.

"பாக்கியம்... அவள் எங்கடை மூத்தவளை நினைச்சிட்டாள் போலை. நான் திருந்திவிட்டன்பாக்கியம்! சத்தியமா என்னை நம்பு பாக்கியம்...!!" கணபதி.


சோமுவுக்கு உள்ளூரநல்ல மகிழ்ச்சி என்றுமில்லாதவாறு

(8-ம் பக்கம் பார்க்க)

# தொடர் நவீனம்

# பரம்பரை அகதிகள்

— தெணியான் —



கந்தசாமியின் குடும்பம் கரணவாய்க்கு வந்து சேர்ந்து ஆறுமாதங்கள் கழிந்து விட்டன.

கந்தசாமி இப்போது முன்போலச் சின்னக்குஞ்சியின் வீட்டுக்குத் தினமும் போய்வருவதற்கு முடியவில்லை. அதனால் அவள் குடும்பம் என்னகஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறதோ என்ற கவலை சதா அவன் மனத்தை உறுத்திக்கொண்டிருந்தது. அவள் குழந்தைகளில் இருவரைத் தன்னோடு அனுப்புமாறு அவன் போய்க் கேட்டுக்கொண்ட போதும், அவள் அதற்குச் சம்மதிக்காமல் மறுத்து விட்டதும் அவனுக்கு வேதனையாகவே இருந்தது.

தங்கமணி இன்னும் திருமணமாகாது வீட்டோடிருக்கிறாள் என்பது அவன் மனத்தை வேறொரு புறம் உறுத்திக் கொண்டிருந்தது. வயிரவிக் கிழவனை நேரிற்கண்டு அவள் விஷயமாக இரண்டொரு தடவைகள் அவன் பேசிவிட்டான். ஆனால் இன்னும் அவள் திருமணம் எதுவும் பொருந்தி வருவதாக இல்லை. ஆறுமுகம் வீட்டில் தொடர்ந்து தாங்கள் குடியிருப்பதும் அவன் மனதிற்குச் சரியாகத் தோன்றவில்லை. அந்த வீட்டைவிட்டுக் கிளம்பி வேறு எங்கே போய் ஒதுங்குவதென்பதும் அவனுக்குத் தெளிவாகப் புரியவில்லை. அந்தக்குடும்பத்தோடு சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தால் விரைவிலே தொல்லைகள் வந்து சேரக்கூடுமென்றும் அவன் எதிர்பார்த்தான்.

அவன் எதிர்பார்த்ததுபோல் அதற்கு நீண்டகாலம் செல்லவில்லை. பொன்னம்மாவையும் அவள் மக்களையும் முத்திக்கு முற்றாக வெறுத்துப் போய் விட்டது.

பொன்னம்மா அவள் மருமகன் கந்தசாமியைக் கண்டு ஒதுங்குவதும், அவனுக்குக் கொடுக்கும் மரியாதையும் முத்தியின் நெஞ்சைக் குத்த ஆரம்பித்தது.

பொன்னம்மா, கந்தசாமியோடு அநாவசியமாக நேருக்கு நேர் பேசுவதுமில்லை அவன் முகத்தை ஏறெடுத்துப் பார்ப்பதுமில்லை அவன் நிழலைக் கண்டாலே அவள் ஒதுங்கிப் போய்விடுவாள்.

முத்தி இதற்கு எதிர்மாறானவள்.

"மருமோனைக் கண்டு ஒதுங்கிறதெல்லாம் மாசாலம் மடியிலை கனம் இருந்தால் தானே வழியிலை பயம்; மருமோன் எண்டாப்போலை என்ன...... பெத்தபிள்ளையிலை ஒண்டு தானே!"

அவள் வாய்க்கு வாய் 'இவ்வாறு சொல்லிக்கொண்டு, பேசத்தகாத வார்த்தைகளை எல்லாம் தன் மருமகன் ஆறுமுகத்துக்குமுன் எவ்விதமான கூச்சநாச்சமில்லாது பேசுவாள்.

மீனாட்சி முன்புபோல எப்போதும் அழுது வடிந்து கொண்டிருக்காமல் பொன்னம்மாவோடும் அவள் மக்களுடனும் மனம்விட்டு நெருக்கமாகப் பழகுவதைக்காண முத்திக்கு வயிறெரிந்தது. பனையோலைப் பாய் இழைப்பதற்கு மீனாட்சி அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதும், அவளும் அவர்களும் எப்போதும் உறவு கொண்டாடி ஒற்றுமையாக இருப்பதும் முத்தியின் உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தது.

மீனாட்சி பொன்னம்மா குடும்பத்துடன் நெருங்கி உறவாடுவதற்கு, அவர்கள் அவளுடைய இரத்த உறவுக்காரர்கள் என்பது மட்டும் காரணமல்ல அவர்களுடைய அடக்க ஒடுக்கமும் பண்பான நடத்தையுமே அவளைப் பெரிதும் கவர்ந்தன.

அவர்கள் தங்களுக்குள் மிக அன்னியோன்னியமாகிக் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிப் போய்க்கொண்டிருக்கும்போது முத்தியின் உள்ளத்தில் பொறாமைத்தீ சிறிது சிறிதாக வளர்ந்து கொண்டே வந்தது. பொன்னம்மாவும் அவள் மக்களும் நல்ல மனதோடு தன்னை விரும்புவதில்லை என்பதும், மனத்திலுள்ள வெறுப்பை வெளியிற் காட்டிக் கொள்ளாமல் போலியாக உறவாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் முத்தி காலப் போக்கில் உணரத் தலைப்பட்டாள்.

முத்தி தனக்கேற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து, மனத்தினுள்ளே கறுவிக்கொண்டு, மீனாட்சியின் மேற்கழுகுப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

"எடியாத்தைமாரே! அவள் மீனாட்சி ஆடுகிற ஆட்டத்தை என்னெண்டு இந்த வாய்திறந்து சொல்லுறது! அவள் கந்தசாமியோடை...... சீ...... நான் இந்தக்கண்ணாலை கண்டனான் ஆத்தைமாரே! என்ரை மோளுக்கும் புரியனுக்கும் மெல்லோ இதாலை வாழ்மானம் வரப்போகுது! நாங்களும் மனிசரெண்டு அரையிலை சீலை உடுத்துக்கொண்டு வெளியிலை எப்பிடித்திரியப் போறமோ...! ஐயோ, அண்ணமாரே! இப்பிடியுமொரு கிலிசகேடு எங்களுக்கு வரவேணுமெண்டு தலை எழுத்தோ!"

முத்தி தன் பரிவாரங்களுக்கெல்லாம் அல்லும் பகலும் மீனாட்சியைப் பற்றி இரகசியமாகப் பிரசாரம் செய்யத் தொடங்கினாள்.

இப்படியான வதந்திகள் மக்கள் மத்தியில் எவ்வளவு வேகமாகப்பரவும் என்பதைச் சொல்லவா வேண்டும்!

மீனாட்சியைப் பற்றிய அவதூறுகள் மூக்கும் முழியும் வைத்து அந்தப்பகுதி முழுவதும் பரவிக்கொண்டிருந்தன.

முத்தியின் மனம் அந்த அளவோடு ஆறுதல் பெற்று அமைதி அடைந்துவிடவில்லை. மீனாட்சியை வலுச்சண்டைக் கிழுத்து, தன் மனக்கொதிப்பு அடங்கும் வரை அவளை இரண்டு கேள்வி கேட்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தாள். சந்தர்ப்பங்களைத்தானே வலிந்து உருவாக்கிக்கொண்டு அடிக்கடி அவளைச் சீண்டிக்கொண்டே வந்தாள்.

மீனாட்சி, முத்தியின் கல்லெறிகளுக்கெல்லாம் மெல்ல விலகி விலகி, ஒதுங்கிப்போய்க் கொண்டிருந்தாள்.

முத்தி தனக்கென்று இரண்டு கோழிகளை வீட்டிலே வளர்த்து வந்தாள் கோழிகளில் ஒன்று இடும் முட்டையை இரண்டு தினங்களாகக் காணவில்லையாம். இதைச் சாட்டாகக்கொண்டு நீண்ட நாட்களாக அவள் எதிர்பார்த்திருக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கும் நோக்கத்துடன போர்ப்பிரகடனம் செய்வது போலத்தன் வசைகளை ஆரம்பித்தாள்.

அவள் வாயிலிருந்து கேட்பவர்களுடைய காதைக் கூச வைக்கும் மிகக் கீழ்த்தரமான வசவுகளும் திட்டுகளும் வார்த்தைகளாக வெளிவந்து கொண்டிருந்தன. காலையில் சுமார் பத்துமணிக்கு ஏசுவதற்கு ஆரம்பித்த அவள், நடுப்பகலைத்தாண்டிப் பொழுது சாய்கின்ற வேளையிலும் வாய்ஓயவில்லை. அவளுடைய குத்தலான ஒவ்வொரு வார்த்தையும் மீனாட்சியின் மேல் வீண்பழிசுமத்தி மறைமுகமாகத்தாக்கிக் கொண்டிருந்தன

அவள் என்ன சொன்ன போதும் மீனாட்சி சூடு சொரணை இல்லாதவள் போல அமைதியாகக் கேட்டுக் கொண்டு பொறுமையோடு இருந்தாள்.

முத்திக்கு, மீனாட்சியின் இந்தப் பொறுமை மேலும் மேலும் சினத்தை வளர்த்துக் கொதிப்பையே கிளப்பிக் கொண்டிருந்தது. சுற்றிவளைக்காமற் கொஞ்சம் நேரடியாகவே தாக்கி அவள்வாயைக் கிளற வேண்டுமென்று முத்தி விரும்பினாள்.

"ஆரோ...... புரியனைத் தின்னிதான் அந்தமுட்டையளை எடுத்துப் போட்டாள்" என்று அவள் ஏச ஆரம்பித்தாள்.

அவள் நேரடியாகவே தன்னைக் குறிப்பிட்டுத் திட்டுவதற்கு ஆரம்பித்த பிறகு மீனாட்சியாற் பொறுமையுடன் இருப்பதற்கு முடியவில்லை.

மீனாட்சி தனக்கே உரியதான அந்தப் பொறுமையை இழந்தாள். அடக்கமுடியாத ஆத்திரத்தால் அவள் கண்கள் சிவந்தன. உடல் படபடவென்று நடுங்கத்தொடங்கியது வார்த்தைகள் தெளிவாக வெளிவர இயலாமல் திக்கித் திணறித் தடுமாறின.

"எனை, ஆரெனை உன்ரை முட்டையை எடுத்தது?"

"என்ரை நாச்சியார், உனக்கேனெனை கோவம் வருகுது? நீ தான் எடுத்தனி எண்டு நான் சொன்னனோனே! நீ ஏனெனை நனைச்சுச் சுமக்கிறாய்! எனக்குத் தெரியும்...... தெரியும்...... மடியிலை பாரமிருந்தால்......" என்று அவள் நையாண்டியாகக் கூறி மீண்டும் அவளையே குற்றஞ் சாட்டினாள்.

முத்தியின் கிண்டலும் கேலியும் மீனாட்சியின் இதயத்தை இடித்துப் பிளந்தன. அவர்கள் இருவருக்குமிடையில் வார்த்தைகள் தடித்து, தர்க்கம் வலுத்தது.

அந்த வீட்டில் மீனாட்சியிலும் பார்க்க அதிகாரமும் உரிமையும் கூடியவள் தானே தான் என்பதை நிரூபிப்பவள் போல, முத்தி எகிறி எகிறிக் குதித்தாள்.

முத்தியின் மகள் அவளுக்குக்கணக்குக் கொடுக்கவேண்டுமென்பதற்காக, இருவரையும் சமாதானம் பண்ணி வைப்பவள் போல இடையில் இரண்டு வார்த்தைகள் சொல்லிக்கொண்டு, அவள் மெல்ல விலகிக்கொண்டாள்.

முத்திக்கா தெரியாது, தன்னுடைய மகளின் குணம்! முத்தி, மகளின் வார்த்தையைத் தூக்கி எறிந்துவிட்டு ஓயாமல் வசைமாரி பொழிந்து கொண்டிருந்தாள்.

முத்தியின் வீராவேசமான வசைமொழிகளைக் கேட்டு, அடுத்தடுத்த வீடுகளிலுள்ள பெண்கள் எல்லாரும் ஓடோடி வந்து அங்கு கூடிவிட்டார்கள்.

இழவு வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் வரவேற்று ஓங்காரமாகப் பறைமுழங்குவது போல, பெண்கள் கூட்டம் வந்து சேரச்சேர, முத்தியின் குரல் உச்சஸ்தாயியில் ஏறிக் கொண்டே சென்றது.

முத்தியின் வாயிலிருந்து உக்கிரமாகப் புறப்பட்டுவந்து கொண்டிருக்கும் அக்கினி அஸ்திரங்களான சுடுசொற்களுக்கு முன்னால், அப்பாவியான மீனாட்சி எதிர்த்து நிற்பதற்கு இயலாமல் மெல்ல வாயடங்கி, மனக்குமுறலுடன் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

## 9

வேடிக்கை பார்ப்பதற்கு அங்கு வந்து கூடிநின்ற பெண்களும், தம்மை அறியாமல் மீனாட்சியைப் பார்த்து உள்ளூரப்பரிதாபப்பட்டார்கள்.

ஆனால் முத்தியின்வாய் அப்போதும் ஓய்வதாக இல்லை.

இதுவரை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வாய் திறக்காமல் உள்ளக் கொதிப்புடனிருந்த பொன்னம்மா, மீனாட்சி வாய்விட்டழத் தொடங்கிய பிறகும் முத்தி அவளை வசைபாடிக் கொண்டிருப்பது கண்டு வேதனை தாங்காமல் மெல்லச் சொன்னாள்:

"எணையாச்சி! அவள்தானே பேசாமல் இருக்கிறாள் நீ ஏன் போட்டு உலுப்பிறாய்!"

"எடியாத்தை, அவை ஒரு இரத்தமெல்லே! அவவுக்கு செல்லோ கோவம் வருகுது என்ரை மருமோளை நான் பேசினால் உனக்கென்னடி?"

பொன்னம்மா எப்போது வாய் கொடுப்பாள் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்த முத்தியின் சீற்றம், திடீரென்று அவள் பக்கம் திசை திரும்பியது.

"ஓ... ஓ... நீ அவளை உன்ரை மருமேன் எண்டு வைச்சுப் பாத்துத்தான் இவளவும் பேசிறாய்! உனக்கொரு வாயைக் கடவுள் படைச்சிருக்கிறான்"

"என்ரை வாய்க்கு என்னடி குறைஞ்சது! உன்னைப்பற்றித் தெரியாதேயடி எனக்கு...!"

"என்னதெரியும்உனக்கு...?

"அப்படித்தானுக்கும் உன்ரை எண்ணம்...: ஆட்டக்காறி"

"இஞ்சார், நரம்பில்லாத நாக்காலை கண்டதையெல்லாம் கதையாதை..."

(8-ம் பக்கம் பார்க்க)

## வாழ்விலே...

வாழ்க்கை என்னும் பாதையிலே
வந்து போகும் பறவைகளே
வந்த வழி ஓர்வழிதான்
வாழும் வழி பலவழிதான்.

மனதில் காதல் சிந்திவிட்டால்
மாய உலகம் மறந்துவிடும்
விதைக்கும் ஆசை அத்தனையும்
மண்ணின் மீது முளைப்பதில்லை.

எண்ணம் என்னும் சிறகடித்தால்
ஏழுலகும் நீ பறப்பாய்
ஏழையான கன்னிகளோ
ஏனோ இங்கு வாழ்வதில்லை.

உலகம் என்னும் உருண்டைப்பந்து
உருண்டுவிட்டால் காலம் மாறும்
உறுதி உள்ள நெஞ்சங்களே
ஏன் தடு மாறுகின்றீர்,

இ. பாலகுமார்

# நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—13

# தந்தை செல்வாவின் முதலாவது தலைமையுரை

1948 ஆம் ஆண்டில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் டி. எஸ்.சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசில் சேர்ந்து ஒத்துழைப்பதென்று தீர்மானித்தபோது ஜி. ஜி.யின் வலதுகரமாக சோல்பரி ஆணைக்குழுமுன் சாட்சியமளித்து அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டு காங்கிரஸின் முயற்சிகளிலெல்லாம் முன்னின்று விளங்கிய திரு. எஸ் ஜே வி. செல்வநாயகம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது திரு ஜி ஜி. பொன்னம்பலம் டி. எஸ். சேனநாயகாவின் அமைச்சரவையில் கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி, கடற்றொழில் அமைச்சராகப் பதவியேற்றார்.

## தந்தை செல்வா வெளியேறினார்

இதேசமயம் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய-பாகிஸ்தானிய குடியிருப்பாளர் (குடியுரிமைச்) சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. ''இன்று மலைநாட்டுத்தமிழரின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. நாளை நமது உரிமைகளும் பறிக்கப்படும்'' என்று கூறி தந்தை செல்வநாயகம் இந்திய-பாகிஸ்தானியர் குடியிருப்பாளர் (குடியுரிமை) மசோதாவை எதிர்த்து வாக்களித்தார். அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார்.

## எஸ். ஜே. வி.யின் முதல் தலைமையுரை

திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்துடன் திரு. கு. வன்னியசிங்கமும், டாக்டர் இ மு. வி. நாகநாதனும் தமிழ்க்காங்கிரசிலிருந்து வெளியேறினர்.

1949 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைத்தமிழர்களின் உரிமைகள் ஒற்றையாட்சியின் கீழ்ப் படிப்படியாகப் பறிக்கப்பட்டுத் தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்க, அடிமைகளாக்கச் சிங்களத்தலைவர்கள் திட்டம்தீட்டி வருவதாகத் தந்தை செல்வா அன்றே எடுத்துக்காட்டி ஈழத்தில் தமிழர்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி என்ற இணைப்பாட்சி அமைப்பு வேண்டும் என்று தீர்க்கதரிசனத்துடன் கூறினார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முதலாவது மாநாடு 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி கொழும்பில் அரசாங்க எழுதுவினைஞர் சேவைச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டுக்குத் தலைமை வகித்து திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் உரை நிகழ்த்தினார்.

''...9 ஆம் 10 ஆம் நூற்றுண்டுகளில் இலங்கையின் வடக்கில் உள்ள தமிழரின் நிலப்பகுதிகளில் தமிழர் ஆட்சி தொடங்கியது. தெற்கேயுள்ள சிங்கள நிலப்பகுதிகள் தனியாக ஆட்சி செய்யப்பட்டன. சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகள் தென்னிலங்கையில் இருந்தன.

''காலம் மாறினாலும்சிங்கள அரசும் தமிழ் அரசும் தனித்தனியாக நெடுங்காலம் தொடர்ந்தன. பல நூற்றுண்டு கட்கூடாகத் தொடர்ந்தன. ஐரோப்பியர்கள் வந்து முதலில் தமிழ் அரசைக் குலைத்தார்கள். பின்னர் சிங்கள அரசைக்குலைத்தார்கள்.

''...பல நூற்றுண்டுகளாக இருந்த இரு நடுகள் பிரிட்டிஷாரினால் இணைக்கப்பட்டன. இந்த இருநாடுகளும் இயற்கையாக ஒன்றிணையவில்லை...''

தந்தை செல்வா தமிழரசுக்கட்சியின் முதலாவது மாநாட்டில் ஆற்றிய தலைமையுரையில் மேற்கண்டாறு குறிப்பிட்டிருந்தார் (ஆதாரம்: ''ஈழத்தமிழர் இறைமை'' மு திருச்செல்வம்).

## இணைப்புச்சக்தியாக விளங்க விரும்பினார்

இலங்கைத் தமிழரசுக்கட்சியை இலங்கைத் தமிழ்பேசும் இனத்தின் இணைப்புச்சக்தியாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஒருமைப்பாட்டின் சின்னமாகவும் உருவாக்க வேண்டுமென்பதில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கண்ணும் கருத்துமாக இருந்தார், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமது சகாக்களுடன் பிரயாணம் செய்துமக்களைச்சந்தித்துத் தங்கள் இலட்சியத்தையும் கொள்கையையும் எடுத்துக் கூறிப்பிரசாரம் செய்தார். கிழக்கு மாகாணத்தில் இதற்கு முன் வேறெந்தத் தமிழ்த்தலைவர்களும் இந்த அளவுக்கு அக்கறை செலுத்தாததால் தமிழ் அரசுக்கட்சி அங்கு நன்கு வேரூன்றத் தொடங்கியது தமிழ்பேசும் இனத்தின் நலனையே குறிக்கோளாகக்கொண்டிருந்ததால் மலைநாட்டுத் தமிழ்மக்களின் ஆதரவும் முஸ்லிம் மக்களின் ஆதரவும் அதற்குக் கிடைத்தன. வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் ஜி. ஜி. யின் நாவன்மையிலும் ஆற்றலிலும் மக்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந்ததால் தமிழ்க்காங்கிரஸின் செல்வாக்கைக் குறைத்து தமிழரசுக்கட்சியை எடுத்த எடுப்பில் வடக்கில் வளர்த்துக் கொள்வது கடினமாக இருந்தது யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவிலடியில் தமிழரசுக்கட்சியினர் வைத்த முதல் பொதுக் கூட்டம் கூச்சல், கல்வீச்சுச் சம்பவங்களுடன் குழப்பத்தில் முடிந்தது ஆனாலும் திரு செல்வநாயகமும் திரு. வன்னியசிங்கமும் சோர்ந்துவிடவில்லை.

## டி. எஸ். சேனநாயக்கா வருகைக்கு எதிர்ப்பு

திரு. ஜி. ஜி.பொன்னம்பலம் சேனநாயக்கா அமைச்சரவையில் சேர்ந்த பின்பு 1950 ஆம் ஆண்டில் பிரதமர் திரு. டி. எஸ் சேனநாயக்கா முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகரீதியில் விஜயம் செய்தார். அமைச்சர் ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக்குச் சென்ற பொழுது தமிழரசுக்கட்சியினர் 'பிரதமரே திரும்பிப்போ'', என்று கோஷமிட்டு எதிர்ப்புக் காட்டத் தீர்மானித்தனர், இப்படி எதிர்ப்புக் காட்டிய போதும் அது அவ்வளவுக்கு எடுபடவில்லை!

[8 -ம் பக்கம் பார்க்க]

எஸ். எம். ஜி.

## கனவு

ஓ! என் கனவுகளின்
கதாநாயகியே உன்
பார்வையின் ஸ்பரிசத்தால்
என் வாழ்வின்
பௌணமிகள் அர்த்தமற்ற
அமாவாசைகள்
ஆகிவிட்ட......

— சரவணையூர் பிரதீஷ்

## பரம்பரை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

''ஓமெடி நீ ஆட்டக்காறிதான்ரி...

''எடியேய்...... என்னடி சொன்னனி...... என்னெடி சொன்னனி... கோதாரியிலை போவாளே...... நரகத்துக்குப் போவாளே...... உன்ரை நாக்கிலை புத்தொழும்பப் போகுதடி....!''

பொன்னம்மா இரண்டு கைகளாலும் மண்ணை வாரி வாரி அள்ளி ஆகாயத்தை நோக்கி எறிந்தாள்.

''எடிவெடியே... நீபெரிய கற்பாஸ்திரியெடி... நீ எனக்குச் சாபம் போடுறியே! உன்ரை நாத்தமெல்லாம் எனக்குத்தெரியுமெடி தும்பளையிலை உங்களை ஊரைவிட்டு ஏன் துரத்தினவங்கள்?''

''எடியே கண்கெடுவாளே... கண்கெட்டு இருந்து தடவுவாளே... உன்ரை நாக்கிலை புத்தெழும்பப் போகுதடி! ஐயா! கடவுளே! ஆத்தங்கரையில் வேலே! இவளின்ரை தலையிலை இடியேறு வந்து விழாதே! ஐயோ... முருகா... முருகா...!

''எடியே... குந்தியிருக்கக் குடிநிலம் இல்லாதவள் என்ரை வீட்டிலை வந்திருந்து எனக்கு நடப்புக் காட்டிறாய்.''

''ஓமெடி... ஓமெடி...ஆரோ உள்ளவன் உடையவனின்ரை காணியிலை தான்ரி நீயும்இருக்கிறாய், அதுக்குள்ளை பெரிய காணிபூமிக்காறி மாதிரி ஏன்ரி கதைக்கிறாய்?

''உள்ளவன் உடையவன் உன்னையெடி இதுக்குள்ளை கொண்டந்து விட்டவன். எடி கூத்தாடி... மட்டுமருவாதையோடை இந்த வளவுக்கை இருந்த எங்களை மதிப்பிறக்கத் தானேயெடி நீங்கள் இஞ்சை வந்திருக்கிறியள். இஞ்சை வீட்டுக்குள்ளை என்ன நடக்குதெண்டு நாலுபேரறியச் சொல்லட்டேயெடி!

முத்தி சொல்லி வாய்மூடவில்லை, அதற்குள் மீனாட்சி வெறிகொண்டவளாக அவள் மேற்பாய்ந்து, அவளுடைய கொண்டையை பிடித்திழுத்துக் கீழே தள்ளினாள்.

தன் இரண்டு கைகளாலும் மண்ணைக் கோலிஅள்ளி அவள் தலையிலே கொட்டினாள்.

முத்தியின் மகள் ஓடிவந்து தங்கத்தைப் பிடித்திழுத்தாள்

அதுவரை எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற பெண்கள் மீனாட்சியைப் பிடித்திழுத்து, அவள் பிடியிலிருந்து முத்தியை விடுவித்தார்கள்.

தங்கமணி இவைஎல்லாவற்றையும் பார்த்து ஒரு புறத்தில் வாய்விட்டு அழுதுகொண்டு நின்றாள்

அப்போது தொழில்முடிந்து வீட்டுக்குத் திரும்பிவந்த கந்தசாமி மௌனமாகத் தலைகுனிந்துவீட்டுக்குள் நுழைந்தான்.

(வளரும்)




குறுகிய காலத்தில்
அதி உயர் வருமானம்

உங்கள் முதலீடுகளுக்கு அதிஉயர் வட்டி 30% ஷப்ரு தருகிறது

★ நிதி உதவி!

★ நிலையான வைப்பிற்கு அதி உயர்வட்டி!

★ உழைக்கும்போதே சேமிப்பதற்கு புதியவழி!

★ தவணைமுறை கொள்வனவு வசதி!

★ வெளிநாட்டு உள்நாட்டு காசோலைகள் மூலமாகவும் நிலையான வைப்புக்கணக்கை (Fixed Deposit) ஆரம்பிக்கலாம்.

★ மாதாந்த சேமிப்புத் திட்டம் உழைப்பாளர்களுக்கு ஒருவரப்பிரசாதம்.

★ முதலீடுகளுக்கு எதிராக கடன் வசதியுண்டு.

SHABRA

Unico Finance Limited

61, நியூபுல்லர்ஸ்வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310,

207, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073

நிறுவனத்தின் நிதி நிலைமை

| நிதியாண்டு | 1981/1982 | 1982/1983 | 1983/1984 |
|---|---|---|---|
| முதலீடு | ரூ. 178,700/= | ரூ. 500,000/- | ரூ. 1000,000/- |
| ஒதுக்கீடு | — | 31,510/- | 321,810/- |
| வைப்பு முதல் | 1280,760/- | 4236,969/- | 123,98,671/- |
| கடன் பெறு முதல் | — | — | — |
| வைப்பாளர்களுக்கு வட்டி வழங்குமுன் இலாபம் | 191,019/- | 574,960/- | 24,77,997/- |
| வைப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 142,977/47 | 492,217/12 | 21,82,765/- |
| தேறிய லாபம் | 48,041/74 | 82,743/53 | 261,926/- |

31-03-85இல் மொத்த வைப்பு 300 இலட்சத்திற்கு மேல்

இயக்குநர்கள்:- எஸ். பாலசுப்பிரமணியம் (F.I.B Lond) கே. சண்முகம், [illegible]

# வல்லரசுகளின் ஆயுத பலம்

# ஆயுதப்போட்டியை அதிகரிக்கிறதா?

இணுவில் ஆர். எம் கிருபாகரன்

அகிலம் முழுவதும் அரசியல் விமர்சகர்களால் அலசப்படும் ஒருமுக்கிய கருப்பொருள், வல்லரசுகளின் ஆயுதப்போட்டியாகும். குறிப்பாக சோவியத்ரஷ்யா, அமெரிக்கா என்பன ஆயுதப்பரிகரண ஆயுதக்குறைப்பு பற்றிய பேச்சுக்கள் சம்பந்தமான நடவடிக்கைகளின் பிரதிபலிப்பே வல்லரசுகளின் ஆயுதபலக் கட்டுப்பாட்டு மாநாடுகளால் ஆயுதப்போட்டி மேலும் அதிகரிக்கச் சந்தர்ப்பமாகலாம். ஏனெனில் இம்மாநாடுகளில் கலந்து கொள்ளும் மேற்படி நாடுகளின் இராஜதந்திரிகள் முன் வைக்கும் புள்ளிவிபரங்கள், திட்டங்கள், பிரஸ்தாபிக்கும் விவாதங்கள் என்பனவற்றின் விபரங்கள் மூலம் போட்டி வல்லரசுநாடுகள் எதிரியின் பலத்தை அறியமுடிகிறது. தமது பலத்திலும் பார்க்க, கூடியபலம் எதிர் அணியில் இருப்பின் அந்தந்த நாடுகள், மாநாட்டின் தீர்மானங்களையும் மீறி ஆயுத உற்பத்தியை அதிகரிக்கலாம் என அரசியல் அவதானிகள் பலர் கருதுகின்றனர்.

## வல்லரசுக் கெடுபிடிகள்

அமெரிக்க அதிபர் றீகனின் நட்சத்திரப்போர் திட்டமும் இத்தகையதே. சோவியத்யூனியனும் அமெரிக்காவும் ஆயுதக்குறைப்பு மாநாட்டில் கலந்து கொண்டாலும் உண்மையில் மனதார, ஆயுதங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற அக்கறையுடன்தான் கலந்து கொள்கிறதா? என்பது சந்தேகமே. ஏனெனில் ஒவ்வொருநாடும் முடிவடையும் போதும் சோவியத் அல்லது அமெரிக்கா அடுத்த மாநாட்டில் இழுத்தடிப்பதற்கு முயன்று வந்ததையே கண்டிருக்கிறோம். மற்றையது. ஆயுதங்கள் குறைக்கப்பட்டால் தமக்கு அடுத்த படியாகவுள்ள வல்லரசுகளான சீனு, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளின் ஆயுதபலத்துக்கும் தாமும் குறைக்கப்பட வேண்டும் என்ற அச்சம். மற்றையது, தம்மிடம் ஆயுத உதவி பெற்றுவரும் சிறியநாடுகளும், தம்மால் ஆட்டிவைக்கப்படும் நாடுகளும் தம்மை மதிக்காமல் விடலாம் என்ற அச்சம். மேற்படி பல காரணங்களால் தான் ஆயுதக்கட்டுப்பாட்டுப் பேச்சுவார்த்தைகள் முற்றுப் பெருத இழுபறி நிலையிக் கேள்விக்குறியாகத் தென்படுகிறது. ஓர் அணு ஆயுதப்போர் ஏற்பட்டு அணு ஆயுதங்கள் பாவிக்கப்பட்டால் அதன் விளைவு எவ்வளவு தாக்கத்தை உண்டாக்கும் என்பதை மேற்படி நாடுகள் நன்கு அறிந்திருந்தும் அணுஆயுதக்குறைப்பில் அக்கறைகாட்டாதது மனிதத்துவத்தில் அக்கறையின்மையை அப்பட்டமாகக் காட்டுகிறது.

## சோவியத் யூனியன் முதலிடம்

தற்போதைய சூழ்நிலையில் ஆயுதபலத்தைப் பொறுத்தவரையில் சோவியத்யூனியனே முதலிடம் வகிக்கிறது. இரண்டாமிடத்தையே அமெரிக்கா வகிக்கிறது. மூன்றாவதாகச் சீனு உள்ளது. சோவியத்ரஷ்யா கடந்த ஒருசில வருடங்களுக்குள் தனது பலத்தைப்பல மடங்கு பெருக்கியுள்ளது. மத்திய அமெரிக்கா, மூன்றும் உலகின் சிலநாடுகள், ஆட்சி எதிர்ப்பு- கிளர்ச்சியாளர்கள் எனப்பல இடங்களில் அமெரிக்காவின் உதவியும், தலையீடும் அதிகரித்தபின்னரே சோவியத்ரஷ்யாவின் இந்த நடவடிக்கைகள் அதிகரித்ததை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

ரஷ்யாவிடம் 35 இலட்சம் படைகளும், 7450 யுத்த விமானங்களும்' 356 குண்டு வீச்சு விமானங்களும், 290 யுத்த-நாசகாரிக்கப்பல்களும்' 1398 கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளும் உள்ளன.

அமெரிக்காவிடம் மொத்தம் 21,43,250 படைகளும் 5940 யுத்தவிமானங்களும், 129 குண்டு வீச்சு விமானங்களும், 187 யுத்த- நாசகாரிக்கப்பல்களும், 1033 கண்டம் விட்டுக் கண்டம்பாயும் ஏவுகணைகளும் உள்ளன.

மூன்றுவது வல்லரசான சீனுவிடம் 42 இலட்சம் துருப்புக்களும், 6100 யுத்த விமானங்களும், 103 குண்டு வீச்சு விமானங்களும், 35 யுத்தக் கப்பல்களும், 4 கண்டம் விட்டுக்கண்டம்பாயும் ஏவுகணைகளும் உள்ளன. மேற்படி புள்ளிவிபரங்கள் இம்மூன்று நாடுகளாலும் அதிகாரபூர்வமாய் வெளியிடப்பட்டது.

## நகரங்களைக் குறிபார்க்கும் ஏவுகணைகள்

எனினும் ரஷ்யாவிடம் 5000க்கும் மேற்பட்ட நவீன ரக யுத்த டாங்கிகளும், 200க்கும் அதிகமான அணுவாயுத ஏவுகணைகளும் இதேபோல் அமெரிக்காவிடம் 4800 வரையிலான யுத்த டாங்கிகளும் 170க்குமேற்பட்ட அணுவாயுத ஏவுகணைகளும், சீனுவிடம் 6200 யுத்தடாங்கிகளும் இருப்பதாகத் தெரிகிறது. இதில் சீனு துருப்புகள் எண்ணிக்கையில் அதிகம் கொண்டிருந்தாலும், அதன் இராணுவதளபாடங்கள் பழமையானவை. இவற்றைப் புதுப்பித்து உதவ அமெரிக்கா கொள்கையளவில் ஒப்புக்கொண்டதாக அமெரிக்க இராணுவஸ்தாபனம் பென்ரகன் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது மாஸ்கோ இராணுவ வட்டாரங்களில் அச்சத்தை ஏற்படுத்தியது. இதனுல் இவற்றிற்கெல்லாம் பதிலடி கொடுத்தது போல ரஷ்யா தனது யுத்ததளபாட உற்பத்தியை மேலும் நவீனமயப்படுத்துவதோடு அதிகரித்தும் வருகிறது. இது கண்டு கிலிபிடித்த அமெரிக்கா, ஐரோப்பாவில் தனது நேச நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், மே. ஜேர்மனி, இத்தாலி ஆகியவற்றில் தனது அணுவாயுத ஏவுகணைகளை நிறுவுதில் அதீதப்போக்கை முனைப்புடன் செயற்படுத்தி வருகிறது, ரஷ்யாவும் ஐரோப்பாவில்தன் ஆதரவு நாடுகளான கி. ஜேர்மனி, போலந்து என்பவற்றில் தனது அணுவாயுத ஏவுகணைகளை நிறுவி வருகிறது. இவைகள் அமெரிக்காவின் முக்கிய நகரங்களான வாஷிங்டன், நியூயோர்க், சிக்காக்கோ, கலிபோர்னியா என்பவற்றைக் குறிபார்த்து ஏவுவதற்குத் தயாராய் வைக்கப்பட்டுள்ளதாம்.

இந்த அணுவாயுத ஏவுகணைகளை அகற்ற அமெரிக்காவும் ரஷ்யாவும் பேச்சுவார்த்தை நடாத்தியதால் எவ்விதபயனையும் அடையாதது அச்சத்தை மேலும் மேலும் அதிகரிக்கிறது இந்த அணுவாயுத ஏவுகணைகள். அணுகுண்டுகள் என்பவற்றை நினைக்கும்போது பூகோளம் இருந்த இடத்தில் சாம்பல்மேடு இருக்கும் காட்சிதான் மனக்கண்ணில் தெரிகிறது.

ஆயுதப்போட்டி விஷயத்தில் பல காலமாகவே சர்ச்சைக்குரிய நாடுகளாக இந்தியாவும் பாகிஸ்தானும் இருந்துவருவதை அவதானிக்கலாம். பாகிஸ்தான் ஒருபுறம் ஆப்கானிஸ்தானுலும் மறுபுறம் இந்தியாவாலும் ஆபத்தை எதிர்நோக்குவதாய் கூறி அமெரிக்காவிடம் அதிக ஆயுதங்களை வாங்கிக்குவிக்கிறது இந்தியா தனக்கு சீனு, பாகிஸ்தான் ஆகியவற்றைக் காட்டியும் இந்து சமுத்திரம் அமைதியற்ற பிரதேசம் எனக் கூறியும் நானுவித ஆயுதங்களை வாங்கிக்குவிக்கிறது. இவையெல்லாம் பெரும்பாலும் ரஷ்யத் தயாரிப்புகளேயாகும். அது மட்டுமன்றி இந்தியா உள்நாட்டிலேயே பல ஆயுதங்களை உற்பத்தி செய்வது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். விஜயானந்த. பீடிஆர் ரக யுத்த டாங்கிகள் இந்தியாவின் சொந்த தயாரிப்புகளே. அதி நவீன ரக டாங்கியான ''அர்ஜீன்'' சமீபத்தில் சென்னை ஆவடியிலுள்ள இராணுவ மைதானத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இரவிலும் குறிபார்த்து எந்த ஒரு இலக்கையும் சுடக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டது. இந்த ''அர்ஜீன்'' ரக யுத்த டாங்கி. இந்தியாவசம் இப்போது 34 படைப்பிரிவுகளைச்

(8-ம் பக்கம் பார்க்க)

# தேனுன கவிதைகளில்

# தெய்வத்தைக்கண்டவர்கள்

க. கணேசலிங்கம்

எல்லா உலகமும் ஆன இறைவனைக் காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கி ஓதிய நமது சமய நாயன்மார்களும் மெய் அடியார்களும் தாம் மனம் கனிந்து உருகிப்பாடிய இனிய தேனமுதப் பாடல்களில் எப்படியெல்லாமோ அன்புருகிப் பாடினுர்கள். பக்திமயமான தேன் ஊறும் தமது பாடல்களில் அவர்கள் இறைவனை அழைத்தவிதம் மனதைநெகிழ வைக்கும் சக்தி வாய்ந்தவை.

இறைவனை, எல்லாம் வல்ல இறைவனை அவர்கள் எப்படி அழைத்தார்கள் என்று பார்ப்போம்.

பால் நினைந்தூட்டும் தாயே, அன்பினில் விளைந்த ஆரமுதே, தெள் அமுதே, ஆருயிரே, அன்பான துணையே, தித்திக்கும் ஆனந்தத்தேனே, தேன் ஆறே, தீஞ்சுவைக்கனியே, கற்பகக் கனியே, கனிந்த முக்கனியே, தேன் கனியே, கனி அமுதே, இன் அமுதே, அன்புப்பழமே, தீங்கரும்பே சர்க்கரைப்பாகே, கற்கண்டே, இன்பச்சுவையே, கனிரசமே, மதுரசநாதமே, இன்னிசை நாத வெள்ளமே, ஒலியே அருட்சோதியே, பரஞ்சோதியே, ஒளிவிளக்கே, சுடரே, சுடர்மணியே, கண்ணின் மணியே, மணியாடு பாவாய், ஒப்பிலாமாமணியே, மாசிலாமணியே, நவமணியே, முழுவயிரத் தனிமணியே, பொய்கையே, தீங்காற்றே, பூங்காற்றே தென்றல்காற்றே பூந்தென்றலே, இப்படி மட்டுமோ அழைத்தார்கள் பசும் சோலையே, குளிர்சோலையே, பூம்பொழிலே, சுகந்தமண மலரே, நறுமலரே, வசந்த மலரே, வாசமலரே, மலர்ந்த மலரே, செண்பகப்பூவே, மடலவிழ் ஞானமலரே, இன்ப மழையே, பூம்புனலே, குளிர் தருவே. தருநிழலே, கற்பகமே, தெள்ளிய அமுதமே, பசும் பொன்னே, வைரமே, வைடூரியமே, மரகதமே, முத்தே, இரத்தினமே, வடிவுடை மாணிக்கமே, பவழமாமலையே, பேரின்பமே, பேரருளே, ஆற்றிலப வெள்ளமே. ஆனந்த வெள்ளமே, தேன்அமுதப் பெருங்கடலே, மழைமுகிலே, மயிலே, கருணை வெள்ளமே, கருணை மாமழையே, கருணை மாகடலே, அருட்பெருங் கடலே, கருணைநிதியே, குளிர் நிலவே, தண்மதியே, முழு நிலவே, பால் நிலவே, கலையே.

தேனென இனிக்கும் திருவருட்கடலை இன்னும் எப்படி அழைக்கின்றார்கள் என்று பார்ப்போம்.

தீஞ்சுவைத் தண்ணீரே, செல்வமே, அருள் விருந்தே, பேரானந்தமே, எழிலே, அற்புதமே அற்புதக்கோலமே, செல்வமே, அருமருந்தே, மெய்ப்பொருளே, அருநிதியே.

இப்படியெல்லாம் தமது செந்தேன் அமுதக்கவிதைகளில் இறைவனை அழைத்ததோடு மட்டுமல்லாமல் அடியார் ஒருவரின் பாட்டை மற்றொரு அடியார் பாராட்டிப் புகழவும் செய்தார்கள்.

' தேன்படிக்கும் அமுதாம்உன்
திருப்பாட்டைத்
தினந்தோறும்
நான்படிக்கும் போ(து) என்னை
நான் மறந்தேன்
நாவொன்றே
ஊன் படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும்
உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவமிகான
தனிக்கருணைப்
பெருந்தகையே''

சந்தரருடைய சுவையான செந்தமிழ்ப் பாக்களை அருள் பிரகாசவள்ளலார் (இராமலிங்க சுவாமிகள்) இவ்விதம் அனுபவித்துச் சொல்கின்றர்.

சுந்தரருடைய பாக்களை ரசிக்கும் ரசிகனுக நிற்கும் இராமலிங்கசுவாமிகள் தமது அருட்பாவில் இறைவனைத் தாயாக தந்தையாக வாயார வாழ்த்துகின்றர், புகழ்ந்து போற்றுகின்றர்;

''தாயாகித் தந்தையுமாய்த்
தாங்குகின்ற தெய்வம்
தன்னை நிகரில்லாத்
தனித்தலைமைத்தெய்வம்
வாயார வாழ்த்துகின்றேர்
மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை
வைத்த பெருந்தெய்வம்
காயாது கனியாகிக் கலந்
தினிக்கும் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங்
காட்டுவிக்கும் தெய்வம்
சேயாகவெனை வளர்க்குந்
தெய்வ மகாதெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம்''

தீஞ்சுவைத்தமிழால் மனம் உருக கவிதைபுனைந்தளித்த மாணிக்கவாசகர் இறைவனை எவ்விதம் பாடுகின்றர் என்பதனையும் பார்ப்போம்:

அது பழச்சுவையென அமு
தென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும்
அறியார்
இதுவவன் திருவுரு இவன்
அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்
கெழுந்து அருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர
கோச மங்கையுள்ளாய் திருப்
பெருந் துறையுறை மன்னு
எது எமைப்பணி கொளு
மாறது கேட்போம்
எம்பெருமான் பள்ளிஎழுந்தரு
ளாயே''

இவ்வாறு இறைவனின் பெருமையை புகழைப்பாடி எம்பெருமானை எழுந்தருளுமாறு வேண்டுகின்றர் மாணிக்கவாசகர்.

முக்கனியைப்பிழிந்து வடித்து ஒன்ருகக்கூட்டி சர்க்கரை, கற்கண்டின் பொடி மிகக்கலந்து நறுந்தேன் பெய்து பசும்பால் சேர்த்துப் பதமாகக் காய்ச்சியது போல் இறைவனைத் தேனூறும் தமிழ் கவிதைகளால் செவி குளிரப்பாடிய பாடல்கள் நாவுக்கு ருசியையும் இதயத்துக்கு பேரின்பத்தையும் தருவதாகவே இருக்கின்றது.

''தனித்தனி முக்கனிபிழிந்து
வடித்தொன்ருய்க் கூட்டி
சர்க்கரையும் கற்கண்டின்
பொடியுமிகக் கலந்தே
தனித்த நறுந்தேன்பெய்து
பசும்பாலும் தெங்கின் தனிப்
பாலும் சேர்ந்தொரு தீப்பருப்
பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே
இளஞ்சூட்டில் இறக்கி
எடுத்த சுவைக் கட்டியினும்
இனித்திடும் தெள்ளமுதே
அனித்தமறத்திருப் பொது
வில் விளங்கு நடத்தரசே
அடிமலர்க்கென் சொல்லணி
யாம் அலங்கல் அணிந்
தருளே''

— இராமலிங்க சுவாமிகள்

அவனவன் செய்த பாவ புண்ணியங்கள் அவனவனையே வந்தடைகின்றன. முற்பிறவியில் செய்த் பழவினை தனக்குரியவனைத் தவருமல் சென்று அடையும்.

- கீதை

# இவர் ஒரு கிராம சேவையாளர்

தனது வாழ்க்கைமுறையாலும், பதவியாலும் சேவையொன்றே இலட்சியமாகக் கொண்டு வலிகாமம் வடக்கில் வாழ்ந்து இன்று அறுபதுவயது பூர்த்தி காரணமாக பதவியிலிருந்து இளைப்பாறியுள்ள சுப்பிரமணியம் கனகசபை ஆல்போல் நின்று பலரையும் ஓம்பும் பண்பாளர் பொதுசனச் சேவை, கூட்டுறவு, சைவப் பணி ஆகிய துறைகளிலும் அறுகு போல்படர்ந்து சிறந்தவர்.

1952-63 வரை தெல்லிப்பளை வடமேற்குப் பகுதியின் கிராமத் தலைமைக்காரனாகவும் 1963 மே முதல் 1985 பெப்ரவரி 22ந் திகதிவரை கிராம சேவையாளராகவும் பதவி வகித்து, இப்பதவியாலும், தனது தனிப்பட்ட வாழ்வினாலும் மக்கள் பணிபுரிந்து உன்னத சேவையாளராக திரு. கனகசபை பல்வேறு இடங்களிலும் கிராமசேவையாளராகப் பதவி வகித்துப்பல வழிகளிலும் தமது சேவை முத்திரையைப்பதித்து ஓய்வு பெற்றுள்ளார்.

## 'கண்ணாடி'

கிராமத் தலைமைக்காரனாக இருந்தபோது 958ம் ஆண்டு பெருமழை, புயல் என்பவற்றால் தெல்லிப்பளை வடமேற்குப் பகுதியில் ஏற்பட்ட பாதிப்புகளினால் மக்கள் அகதிகளானபோது ஆற்றிய நிவாரணப்பணி தனித்துவமானது 'வசந்தபுரம்' குடியேற்றத் திட்ட நிர்மாணத்திற்கும் அக்குடியேற்றத்தின் அபிவிருத்திக்கும் அத்திவாரமாக விளங்கியவரும் இவரே. இங்கு கிராம முன்னேற்றச் சங்கம், நெசவு நிலையம், கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் முன்னோடி ஸ்தாபகராகவும் விளங்குகிறார். தெல்லிப்பளை தென்மேற்குப்பகுதிக் கிராமசேவையாளராகி கீரிமலைக் குடியேற்றத் திட்டம், கருகம்பானைக் கிராமமுன்னேற்றச் சங்கம் ஆகியவற்றை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும் இணுவில், தாவடி கிராம சேவையாளராகப்பதவி வகித்தபோது 1968ம் ஆண்டு வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஆற்றிய சேவை என்றும் மறக்கமுடியாது.

மாவிட்டபுரம் கிராம சேவையாளராக இருந்த காலத்தில் மாவை. அருள்மிகு கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசம் நடப்பதற்கும் கோவில் மகோற்சவங்கள் சிறப்புறுவதற்கும் பெரும் பங்காற்றினார் இக் கோவிலின் திருப்பணிச் சபையின் உறுப்பினராகவும், செயலாளராகவும் இருந்து வசந்த மண்டபத்தை நிர்மாணிப்பதில் பெரும் பங்களிப்புச் செய்தார். மேலும் கீரிமலைக்குடியேற்றத் திட்டத்தில் பனம்பொருள் அபிவிருத்திச் செய்முறைப் பயிற்சி நிலைய நிறுவுவதற்கும், கீரிமலைக்கிராம வீடமைப்புத்திட்டம் நிறைவேறுவதற்கும் பக்கபலமாக நின்று உழைத்துள்ளார் கீரிமலைப் புனித தீர்த்தப் புனருத்தாரண வேலைகளின் போது. மாவட்ட அரசாங்க அதிபருக்குப் பக்கபலமாக இருந்து அரும்பணி புரிந்தார் இன்று கீரிமலைக் கேணியில்தீர்த்தமாட வரும் கடவுளர் தங்கும் மண்டபத்தை அழகுற அமைத்தமையில் இவரின் பங்கும் குறிப்பிடத்தக்கது.



### பொதுவாழ்வு

திரு. கனகசபை தனது உத்தியோகக் கடமைகளைவிட தனிப்பட்ட வாழ்க்கையிலும் பொதுமக்களின் நல்வாழ்வு, ஊர் அபிவிருத்தி- முன்னேற்றம் இவற்றில் அதிக ஈடுபாடு உடையவர். கருகம்பனை ஐக்கிய பண்டசாலை நட்டத்தில் இயக்கி அதனைக்கலைக்கும் கட்டத்தில் அச்சங்கத்தின் செயலாளராக இருந்து சங்கத்தைப் புத்துயிர் பெறச் செய்தவர். நித்தியானந்த ஐக்கிய நாணய சங்கத்தின் ஸ்தாபகராகவும், பொருளாளராகவும் இருந்து அதன் வளர்ச்சிக்கு ஆதரவு காட்டியவர். தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நஷ்டமுற்று இயங்க முடியாதிருந்தபோது அச்சங்கத்தின் செயலாளராகப் பதவியேற்று அதனை இலாபகரமாக இயங்கச் செய்ததுடன் சங்கத்திற்குச் சொந்தமாகக்காணியும் பெற்றுக்கொடுத்தார்.

### நகுலேஸ்வர வித்தியாசாலை

1955ம் ஆண்டு தமது சொந்தச் செலவில் சொந்தக்காணியில் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலையை ஆரம்பித்து சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் நிர்வாகத்தை ஒப்படைத்தார். இவ் வித்தியாசாலையின் எதிர்கால நலனைப் பேணும் வகையில் முப்பது பரப்புக்காணியை நன்கொடையாக வழங்கினார். கருகம்பனைக் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும், மாவிட்டபுரம் கலட்டி ஸ்ரீ அம்மன்கோவிலுக்கும் கீரிமலைக் கூவில் அண்ணமார் கோவிலுக்கும் காணிகள் நன்கொடை செய்துள்ளார்.

கருகம்பனை சனசமூக நிலையச் செயலாளர், நகுலேஸ்வர வித்தியாலய பெற்றார்-ஆசிரியர் சங்கச் செயலாளர், காங்கேசன்துறைக் கல்விவட்டார பாடசாலைகளின்பெற்றார் ஆசிரியர்சங்கப் பொருளாளராகவுமிருந்து நற்பணிகள் பல ஆற்றிய பெருந்தகையாளர். இன்றும் இவர் பணிகள் சேவைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. பதவி ஓய்வு பெற்றபோதும் அவரின் சேவை தொடர்ந்து கொண்டே உள்ளது.

## குழந்தைக் கவிதை

### வெள்ளை வெள்ளைப்பூக்கள்

வெள்ளை வெள்ளைப் பூக்கள்
விரிந்திருக்கும் பூக்கள்
கொள்ளை அழகுப் பூக்கள்
கொடி முல்லைப் பூக்கள்

கொத்துக் கொத்துப் பூக்கள்
குவிந்திருக்கும் பூக்கள்
புத்தம் புதுப் பூக்கள்
பொன்னலரிப் பூக்கள்

பஞ்சன் வண்ணப் பூக்கள்
மணிவாழைப் பூக்கள்
கொஞ்சி வண்டு குலவும்
கொடித்தோடைப்பூக்கள்

— தா. தேவமதுரம்

# இவ்வாரம் உங்கள் பலன்

## இன்று

மாதம்- வைகாசி
திகதி - 6 [1985-5-19]
வாரம்: ஞாயிறு
திதி - அமாவாசை பின்னிரவு வரை
நக்ஷத்திரம் - பரணிமுற்பகல் வரை

### மேடம்

உறவினர் ஒருவருடைய விடயம்குறித்து கவலைப்பட நேரிடும், உள்ளத்திலும் சோர்வு தென்படும் அந்நிய நபர் ஒருவரால் ஏமாற்றமடையக்கூடும் குடும்பத்திலும் கருத்துமோதல்கள் தோன்றும் தொழில்விடயத்தில் தொல்லைகள் உருவாகும். இவ்வாரம் எவ்விடயத்திலும் முன்னெச்சரிக்கை நன்று.

### இடபம்

சிநேகிதவழியால் சிக்கல்களுக்கு இடமுண்டு சிந்தித்துச் செயல்படவும் கொடுத்தவாக்கைக்காப்பாற்றமுடியாமல் திண்டாடுவீர்கள் வரவிலும் திருப்தி உண்டு தொழில் புரியுமிடத்தில் மேலதிகாரிகளுடன் கருத்துமோதல்களும் தோன்றலாம்.

### மிதுனம்

பொதுவிவகாரங்களில் தலையிடுவதைத்தவிர்த்துக்கொள்ளவும் தனித்தொழில் புரிவோர் பாதிக்கப்படுவர். சகோதரர்களால் மனச்சஞ்சலப்பட நேரும். முன்னேற்றமும்பாதிக்கப்படலாம் குடும்பத்திலும் நிதிபற்றாக்குறை தென்படும் மாணவர்களுக்கு விடாமுயற்சி வெற்றிதரும்.

### கடகம்

மாணவர்கள் கல்வியில் ஊக்கம் வேண்டும் அன்னைவழி சுகக்குறைவும் ஏற்படும் வாகனச்சொந்தக்காரர்களுக்கு வரவிலும் மந்தமுண்டு இயந்திரங்களுடன் பழகுபவர்கள் இவ்வாரம் கவனம் வேண்டும்.

### சிங்கம்

உபாத்தியார்களுக்கு உயர்ச்சியுண்டு புத்திரவழியாலும் போற்றத்தக்க முன்னேற்றம் உண்டு. வித்தையிலும் விபரீத விளைவுகளுக்கு இடமுண்டு இவ்வாரம் உணவுவிடயத்திலும் போக்குவரத்திலும்கவனம் வேண்டும்.

### கன்னி

தீயவர்களின் எண்ணத்தால் உங்கள் வியங்களில் தீமைகள் விளையும் திடீர் பிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம் இவ்வாரம்விழுந்து நோக்காடு, ஆயுதபயம், ஆகியவற்றிற்கும் இடையிடையே இடமுண்டாம் ஆகவே அவதானம் வேண்டும்

### துலாம்

வாழ்வில் வசந்தம் குன்றும் இல்லத்திலும் இருள்படர்ந்த சூழ்நிலை உருவாகும் கன்னிகளுக்கு களங்கம் ஏற்படக் கூடியவாரமாகையால் ஜாக்கிரதையாக இருக்கவும் மாணவர்கள் முன்னெச்சரிக்கை வேண்டும் தொழிலிலும் தொல்லையுண்டு.

### விருச்சிகம்

அன்னியநபர் ஒருவரால் குறைகேட்க நேரிடும் அடுத்து கெடுப்பதற்கு சிலர் முயலக் கூடும் அளவுக்கு மீறிய சுயகெளரவத்தைத்தேடிக்கொள்ளும் தொழிலதனிலும் தொல்லையுண்டு மாணவர்களாயின் திடீர்ஆகாததலுக்கு ஆளாக நேரலாம் இவ்வாரம் போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

### தனுசு

குருவிசுவாசத்துடன் குடும்பவிருத்தியுண்டு. குறிக்கோளும் நிவிர்த்தியாகும் உயர்ந்த எண்ணங்களால்உயர்வுக்குவழிபிறக்கும். இனசன மகிழ்ச்சியுமுண்டு. தொழிலிலும் சிறப்புண்டு.

### மகரம்

தொழில்தனில் தொல்லையுண்டு தொடர்ந்திடும் வினையினாலே உடல் சோர்வுக்கும் இடமுண்டு. வரவும் பாதிக்கப்படும் தனித்தொழில்புரிவோர் பாதிக்கப்படுவர். வணிகர்களாயின் இவ்வாரம அவதானம் வேண்டும்.

### கும்பம்

கொடுக்கல் வாங்கல் விடயங்களை இவ்வாரம் பின்போடவும். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்கநேரும் மூத்தோர்கள் விடயத்தில் முன்னெச்சரிக்கை வேண்டும் கன்னிகளுக்கு கணிசமானவாரமாகும். மாணவர்களுக்கு மறைமுக தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிடப்படலாம்.

### மீனம்

அதிகம் சிந்திப்பதால் உடல் நலம் பாதிக்கப்படும். அபாயகரமான காரியங்களில் எதிலும் பங்குபற்றக்கூடாது. உங்கள் விடயங்களில் பிறர் தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும் மாணவர்கள் எச்சரிக்கை வேண்டும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## சிறுகதை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துவிச்சக்கரவண்டி தங்கு தடையின்றி ஓடியது.

''என்ன பொன்னம்பலம்... ஊரானைபோலை கிடக்கு... எங்கை கொண்டாட்டத்திற்கே? உங்களுக்கு விஷயம் தெரியாதுபோலை... கணபதியின்ரை மகளல்லே யாரேடையோ நேற்றிரவு ஓடிப் போயிட்டாள்!'' இராகத்துடன் தொடர்ந்த சோமு-

''பெண்களுக்குப்பாருங்கோ ஆசையும் இருக்கவேணும் அதேநேரம் அச்சமும் இருக்க வேணும். இருந்துபாருங்கோவன் உவையள் திரும்பி வராவிட்டால்...'' என்றார். அசுரவேகத்தில்சோமு வீட்டை நெருங்க,

இப்பிடி எங்கடை பிள்ளை நந்தன் செய்வானெண்டு நான் கனவிலையும் நினைக்கேல்லை!'' என்று சோமுவின் மனைவின் பூபாளம் ஊடுருவிக்கேட்க,

இரண்டு ஒப்பாரிச்சத்தமும் ஒழுங்கு சேர்ந்தது சோமுவை...?

(யாவும் கற்பனை)

## தந்தைசெல்வா

(6- பக்கத் தொடர்ச்சி)

1952ஆம் ஆண்டில் பெரிய சேனநாயக்கா இறந்ததும் புதியபிரதமராகப்பதவியேற்ற அவரது மகன் திரு. டட்லி சேனநாயக்கா பொதுத்தேர்தலை நடத்தினார். 1952 ஆம் ஆண்டில் இரண்டாவது பாராளுமன்றத்துக்கு நடந்த இப்பொதுத்தேர்தல் இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டு தொகுதிகளில்தான் வெற்றியீட்டியது. வடக்கில் கோப்பாய்த் தொகுதியில் திரு. கு. வன்னியசிங்கமும், கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலையில் திரு என்.ஆர் இராஜவரோதயமும் வெற்றியீட்டினர்.

இத்தோல்வியைக் கண்டு திரு. செல்வநாயகம் துவண்டுவிடவில்லை. தொடர்ந்து தமது கொள்கையைப் பரப்பிவந்தார்.

[மிகுதி அடுத்தவாரம்]

## வல்லரசு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 12,20,000 படைகள் உண்டு இதில் 47,000 கடற்படையினரும், 1,13000 விமானப்படையினரும், 85000 ரோந்து இராணுவத்தினரும். 175000 எல்லைக்காவல் இராணுவத்தினரும், 2000 கடற் கண்காணிப்பு படையினரும் உள்ளனர். இதைவிட டீ 54 - 55 ரகத்தில் 800 டாங்கிகளும். டீ 72 ரகத்தில் 200 டாங்கிகளும், விஜயானந்த ரகத்தில் 1100 டாங்கிகளும். டீ எம் பெமிக்னேட் ரகத்தில் 100 டாங்கிகளும், பீடிஆர் ரகத்தில் 400 டாங்கிகளும் ஆக மொத்தம் 2600க்கும் அதிகமாக யுத்த டாங்கிகள் உண்டு. இந்திய விமானப்படையைப் பொறுத்தவரையில் அஜித்நட், கன்போரா. மிக் 21. மிக் 23, மிக் 25, மிராஜ் 2000, ஐக்வார் ரகங்களில் மொத்த 720 யுத்த விமானங்கள் உண்டு கடற்படையில் விசாகப்பட்டினம், கொச்சி, கோவா, பம்பாய் போன்றன பெரும் படைத்தளங்களாக விளங்குகிறது. இதில் 68 யுத்தக்கப்பல்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

பாகிஸ்தானிடம் 478600 துருப்புக்கள் உள்ளனர். இதிலே கடற்படையில் 11000 பேரும். விமானப்படையில் 17600 பேரும். ரோந்து மற்றும் தேசிய படையில் ஒரு இலட்சம் பேரும் உள்ளனர். டாங்கிகளைப் பொறுத்த மட்டில் எம் 47, எம் 48 ரகத்தில் 370ம், டீ 54, டீ 55 ரகத்தில் 900உம், எம் 113 ரகத்தில் 500உம் பாகிஸ்தானிடம் உண்டு. விமானப்படையில் 260 யுத்த விமானங்களும், கடற்படையில் 57 யுத்தக்கப்பல்களும் பாகிஸ்தானின் பாதுகாப்பை உறுதி செய்து வருகின்றன. இவைகள் எல்லாம் சமீப காலங்களில் அதுவும் 1971 இந்தியா - பாகிஸ்தான் போரின் பின்னர் பலப்படுத்தப்பட்ட பாகிஸ்தானிய படைபலமாகும். ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள ஒரு இலட்சம் சோவியத்படைகளால் எப்போதும் தனக்குப் பேராபத்தும் உண்டு என உணர்ந்த பாகிஸ்தான் அமெரிக்காவிடம் பெருமளவில் பிந்திய ரக ஆயுதங்களைப்பெற்றுள்ளது. அத்தோடு போதாதென்று தான் அணுகுண்டு தயாரிக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் துடியாய்த் துடிக்கிறது. இது உதவி செய்து வந்து கொண்டிருந்த அமெரிக்காவுக்கே பெரிய அச்சத்தையும் ஆத்திரத்தையும் கிளப்பியிருக்கிறது. அத்தோடு பாகிஸ்தானுக்கான ஆயுத உதவிபற்றி மறுபரிசீலனை செய்யப் போவதாயும் அமெரிக்கா மிரட்டியுள்ளது. தப்பித்தவறி பாகிஸ்தான் கையில் அணு ஆயுதங்கள் கிடைத்து விட்டால் அண்டை அயல்நாடுகள் பாடு திண்டாட்டம் தான். ஆனால் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இருக்குமா? உலகின் ஆறுவது பெரிய வல்லரசு இந்தியா, பாகிஸ்தானைவிட பலத்திலும், வளத்திலும் வலிமையுள்ள இந்தியா தற்பாதுகாப்புக்கு ஏனும் அணுஆயுதங்களைத் தயாரிக்காமல் விடுமா? நிலைமை இப்படியே போனால் உலகில் ஆயுத உற்பத்தியும், ஆயுதப் போட்டியும் அதிகரிக்குமே தவிர வேறொரு பயனும் இருக்காது.

## முருங்கைக்காய் சீஸன்

வாரத்தில் ஒருமுறையோ இருமுறையோ முருங்கைக்காயை உணவில் சேர்த்து வந்தால் இரத்தமும் சிறுநீரும் சுத்தமடையும். வாய்ப்புண் முதலான நோய்கள் அணுகாது. முருங்கைக்காய்சூடு காய்ச்சலையும் மூட்டு வலியையும் போக்கும்.

— ஈஸ்வரி

**ராஜா** தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்-ஜெயப்பிரதா
மஞ்சுபார்கவி
**சலங்கை ஒலி**
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்



**வீடியோ** சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
**ஆயிரம் வாசல் இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30. 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி



**மொடேர்ண்**
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
13-5-85 முதல்
**Dracula**
**ரகுலா**
சிறந்த நடிப்பும், பாலியல் காட்சியும் நிறைந்தது.
மிகக் கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.
ஆசனங்களுக்கு முந்துங்கள்.



**ஹரன்** சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
**வி தி**
(கலர்)



**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00
4-15
Roger moore Ian Henry
in
VENDETTA FOR THE SAINT
ஜேம்ஸ் பொண்ட் சித்திரம்

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி 10-30, 2-30
ரஜனிகாந், ஸ்ரீப்ரியா, சுந்தரராஜன், நாகேஷ், சுருளிராஜன்
நடித்த
**தாய் மீது சத்தியம்**
(தேவர் பிலிம்ஸ்)



**S. T. L. மினிசினிமா**
(திருநெல்வேலி)
மு. ப. 10-30 பி. ப. 2-00
எம். ஆர். ஜி. மஞ்சுளா
நடித்த
**ரிக்ஷாகாரன்**

4-30 P. M.
**I Spit on Your Grave**
(கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்)


# புதிய புத்தகம்

நூல்: திருக்குறள்- அறத்துப்பால்- இல்லறவியல். 1—10 அதிகாரங்கள்

ஆசிரியர் க, சொக்கலிங்கம் M. A.

வெளியீடு: யாழ்ப்பாணம் ஸ்ரீ சுப்பிரமணியபுத்தகசாலை.

திருக்குறளைப் படிப்பவர்கள் பரிமேலழகர் உரையுடனேயே படிக்கவேண்டும். மிகநுணுக்கமான கருத்துரைகளும் விளக்கவுரைகளும் பரிமேலழகராலேயே தரப்பட்டுள்ளன எம்முடைய தமிழ்இலக்கியங்களுள் தலைசிறந்து விளங்குவனவற்றுள் ஒன்ருக அமைவது திருக்குறள். தமிழ்கற்கும் மாணவர்கள் இடைநிலை, உயர்நிலை, பல்கலைக்கழகநிலை ஆகியமூன்று நிலைகளிலும் திருக்குறளைப் படிப்பது பயனளிக்குமென அறிஞர் கருதுவர். எனவே உயர்நிலை வகுப்பாகிய க.பொ.த ப. (உயர்தர) வகுப்பிலே தமிழ்கற்கும் மாணவருக்குரிய குறிப்பிட்ட பாடநூல்களுள் ஒன்ருகத் திருக்குறளும் கற்பிக்கப்படுகின்றது. இந்நூலிலே அறத்துப்பால் பகுதியிலே, இல்லறவியலிலுள்ள பத்துஅதிகாரங்கள் கொண்ட பகுதியே படிப்பதற்கு உரியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியினைக் கற்பவர்களும் கற்பிப்பவர்களும் பயனடையக்கூடியதாகத் திருக்குறள்- அறத்துப்பால்-இல்லறவியல் [1-10 அதிகாரங்கள்] என்னும் இவ்விளக்க நூலை வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ. எழுதியுள்ளார்.

பரிமேலழகர் உரையை நன்கு விளங்கித் திருக்குறள் படிக்கும்போது அதில் ஒருதனி மகிழ்ச்சி பிறக்கும். திருக்குறட் பகுதியைப் படிப்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் கட்டாயம் பரிமேலழகர் உரையை விளங்கிக் கொள்ள வேண்டும். அதிலே கஷ்டமிருப்பின் ஆசிரியர் அவர்களுடைய இந்நூல் அதனைத் தீர்த்து வைக்க உதவும் "க. பொ த ப. (சாதாரண ப் பரீட்சையிலே சித்தியெய்தி உயர்தர வகுப்பிற்கு வந்து தமிழை ஒரு பாடமாகத் தெரிந்து கற்கும் மாணவரது மொழியறிவின் அளவு பரிமேலழகரின் உரையினை விளங்கி உள்வாங்கிக்கொள்ளத்தக்கதாய் இல்லை என்பது ஒரு தலை. எனவே பரிமேலழகரின் உரைக்கு இக்கால மொழிநடையில் ஓர் உரை ஆக்குவது கற்போருக்கும் கற்பிப்போருக்கும் பெரும் பயன் தரும்'' என ஆசிரியர் பொருத்தமாகத் தனனுடைய முகவுரையிலே குறிப்பிடுகின்ருர்.

பரிமேலழகர் உரையினை இக்கால மொழி நடையிலே வழங்குவதுதான் நூலாசிரியரின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது. எனினும், சிற்சில

(10ம் பக்கம் பார்க்க)


**றீகல் மினி**
தினசரி 10-30 மட்டும்
HOLLOWEEN II
காட்சிக்கு காட்சி திகிலூட்டும் பயங்கர ரெகுலாப் படம்;



**லதா மினி**
(கோண்டாவில்)
காலை 10-30 மாலை 3-30
பாண்டியன்—இளவரசி
நளினி நடித்த
**"மண்ணுக்கேற்ற பொண்ணு"**



**ஸ்ரான்லி மினி**
(சினிமா)
10-30, 2-15, 4-15
**Mckennas Gold**
அதிபயங்கரச் சண்டை
குதிரை ஓட்டங்கள்
பாலியல் காட்சிகள்
5'X5' திரையில்



**ஆனந்தி**
**வீடியோ சினிமா**
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி. ஆர். லதா
நம்பியார்
**ராஜ ராஜன்**
(கலர்)


## அமரகவி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதி ஆங்கிலத்தில் மொழி பெயர்ந்த அவரது தமிழ்ப் பாடல் இங்கு தரப்படுகிறது.

பாயுமொளி நீ எனக்கு
பார்க்கும் விழி நானுக்கு
தோயும் மது நீயெனக்கு
தும்பியடி நானுக்கு
வாயுரைக்க வருகுதில்லை
வாழி நின்றன் மேன்மை
யெல்லாம்
தூபசுடர் வானொளியே
சூறையமுதே கண்ணம்மா

(நன்றி; 'கலைமகள்'
உதவியவர்: பி. எஸ். பி.

## கதிர்காமத்தில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

போதைய தலைவர்கள் பல்வேறு இனங்களுக்கிடையிலும் இன ஒற்றுமையை ஏற்படுத்தி ஐக்கியமான இலங்கையை உருவாக்க வேண்டுமெனவும் கதிர்காமக் கடவுளை பிரார்த்திக்கிறேன்.


# ஆத்மசாந்திக் கிரியை அன்னதானம்

உரும்பராயைப் பிறப்பிடமாகவும் மலேசியா ஈப்போவை வாழுமிடமாகவும் கொண்ட

**திரு. சின்னத்தம்பி சின்னையா அவர்களின்**

(இளைப்பாறிய கல்வித்திணைக்கள உத்தியோகத்தர் ஈப்போ)

அன்பு மனைவியாரும், கோலக்கங்சார் திரு த. வல்லிபுரம் தம்பதிகளின் அருமைப் புதல்வியும், பிரபல சமூக சேவகியும், 19-4-1985ல் சிவபதம் எய்தியவருமான

**திருமதி வள்ளித்தாய் சின்னையா அம்மையாரின்**

ஆத்ம சாந்திக் கிரியைகளை முன்னிட்டு

**இன்று ஞாயிறு**

திருநெல்வேலி சைவ அநாதர்களுக்கும், கும், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலில் தங்கியிருக்கும் அநாதர்களுக்கும், கைதடி வயோதிபர் இல்லத்தில் வதிபவர்களுக்கும் அன்னதானம் வழங்கப்படுகின்றது.

திருமதி வள்ளித்தாய் சின்னையா அம்மையாரின்
ஆத்மா சாந்தி பெற
இறைவன் திருவடிகளை இறைஞ்சுவோமாக
ஓம் சாந்தி

3317



# 31-வது நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்: 26-10-1943



மறைவு: 19-4-1985

அமரர்

**செல்லையா பத்மநாதன் அவர்கள்**

(உரிமையாளர் சந்திரா பெனியன் கொம்பனி)

அன்புக் கரங்களால் ஆசையோடு அரவணைத்த அருமைத் தெய்வத்தின் ஆன்மா சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் கொடும் பிரிவால் துயருறும்
தாயார், அருமை மனைவி, பிள்ளைகள்

3335



# மரண அறிவித்தல்

## இ. குமாரசாமி

காலஞ்சென்ற திரு. திருமதி அ. செ. இராமலிங்கம் அவர்களின் சிரேஷ்ட புதல்வன் குமாரசாமி சிவபதமடைந்தார். இவர் பத்மாவதியின் அன்புக்கணவரும், நித்தியானந்தனின் (தொழில் நுட்பவியலாளர்) அருமைத்தந்தையும், நடராசா (Retired S R.D O), சச்சிதானந்தம் (Retired Principal) ஆகியோரின் சகோதரருமாவர். அன்னரின் இறுதிச்சடங்குகள் சனிக்கிழமை, 18-5-85 நடைபெற்றது.

தகவல் இ. சச்சிதானந்தம்
33, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

3333



# தேவை

கண்ணுடித் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு
அனுபவமுள்ள
புளோவர்ஸ் (BLOWERS) ஹெல்ப்பர்ஸ் (HELPERS)
பபிளேர்ஸ் (BUBBLERS) தேவை
இலவச தங்கு வசதிகளும் குறைந்த செலவில்
மூன்று நேரச் சாப்பாடும் வழங்கப்படும்.
வேலைக்குரிய ஊதியமும் ஒப்பந்த அடிப்படையில்
வேலை செய்ய வசதிகளும் வழங்கப்படும். நேரில் வரவும்.

**மகேந்திரா கண்ணுடி தொழிற்சாலை**
இலக்கம் 9, கண்டி வீதி, நாவற்குளி.

(3310)



இலங்கை இந்திய மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யுமுகமாக, சென்னை மாநகரத்தில் மவுண்ட் ரோட், ஜெமினி சதுக்கம் (அண்ணு மேம்பாலம் அருகில்) அமைந்த

# "யாழ்ப்பாண இல்லம்"

அசைவ உணவகத்தைத் திறந்து முற்றிலும் இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை பரிமாற இருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்,

உரிமையாளர்

**யாழ்ப்பாண இல்லம்,**
**பார்சன்கொமோசல் கொம்பிளெக்ஸ்**
**ஜெமினி சதுக்கம்,**
**121, மவுண்ட் ரோட்,**
**சென்னை 6.**

3239

## புதிய புத்தகம்

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

இடங்களிலே அவருடைய கருத்துக்கள் இக்காலத்துக்குப் பொருந்துமாவென ஆராய்ந்து கூறியுள்ளார். உதாரணமாக,

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும்

என்னும் குறளுக்குரிய பரிமேலழகர் உரையை மதிப்பீடு செய்யும் ஆசிரியர் "நடுவு நிலையாளருக்கே மக்கட்பேறு உண்டு, மற்றவருக்கு இல்லை என்ற பரிமேலழகரின் கருத்துப் பொருத்தமோ என்பது சிந்திக்கத்தக்கது. இப்பாடலிலும் முன்னைய பாடலிலும் 'எச்சம்' என்பதற்கு மக்கள், பரம்பரை என்று பொருள் கொண்டதால் ஏற்பட்ட விளைவே இது. எச்சம் என்பதற்கு ஒருவர் இறந்தபின் எஞ்சி நிற்பதாகிய புகழ் அல்லது இகழ் எனக் கொண்டு அதன்மூலமும் தகவு தகவின்மை தெரிந்து கொள்ளப்படும் என்று கொள்ளும் பொருள் கூடிய பொருத்தம் கூடிய பொருத்தம் உடையது போலத் தோன்றுகின்றது" எனக் கூறியுள்ள பகுதியினைப் பார்க்கலாம். இது மாணவர்களுடைய சிந்தனை ஆற்றலை வளர்க்கக்கூடிய கருத்தாகும். இதுபோன்று பல இடங்களிலே ஆசிரியருடைய நுணுகிய நோக்கினைக்காணக்கூடியதாகவிருக்கிறது.

மாணவர்கள் இலகுவிலே விளங்கிக் கொள்ளத்தக்க வகையிலே ஒவ்வொரு குறளுக்கும் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, இலக்கணமுடிவு ஆகியனவற்றை ஆசிரியர்வழங்கியுள்ளார். நூலின்இறுதிப்பகுதியிலே மூன்று மாதிரி வினுக்களைக் கொடுத்து அவற்றுக்கு மாதிரி விடைகளையுந்தந்துள்ளார். அருஞ்சொற்பொருளகராதி பயனுள்ளது க. பொ. த. உயர் வகுப்பிலே தமிழ் கற்கும் மாணவர் ஒவ்வொருவரும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் ஒவ்வொருவரும் படிப்பதற்காகவும் படிப்பிப்பதற்காகவும் உதவக்கூடிய நூல் இதுவாகும்.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ்ப்பாடம் தொடர்பாக ஏற்படக்கூடிய கஷ்டங்களை அனுபவரீதியாக உணர்ந்தவர் இந் நூலாசிரியர் அத்தகைய அனுபவ உண்மையே இச்சிறு நூலுக்குக் "கன"த்தைக் கொடுத்துள்ளது. வள்ளுவரையும் பரிமேலழகரையும் ஒருங்கு சேரத் தரிசிக்க வைத்துள்ளார். மாணவர்களுடைய இடர்ப்பாடு எந்த இடத்திலுள்ளது என்பதை அறிந்து நிவர்த்தி செய்துள்ளதுடன், குறள் கூறும் பொருளைப்பற்றி மாணவர் மேலும் சிந்திக்கவும் ஆசிரியர் இந்நூல் மூலமாக வழியமைத்துள்ளார். ஆசிரியருடையஇப்பணிபாராட்டுக்குரியதாகும்

பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

## ஆஸ்திரேலியாவில் அமிர்

# "எமது போராட்டம் அஹிம்சை வழி தழுவியது!"

## 200 இலங்கையர் ஆர்ப்பாட்டம்!!

(மெல்போர்ண்)

"இலங்கைத் தமிழர்கள் குறித்த எமது போராட்டம் அஹிம்சை வழி தழுவியதே" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆஸ்திரேலியாவில் தெரிவித்தார்.

தற்போது அங்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் மெல்போர்ணில் தமிழ்ப்பிரிவினைவாதஆதரவாளர்கள் மத்தியில் பேசியபோதேமேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கத்தின் இக்கூட்டத்துக்கு இலங்கையைச் சேர்ந்த சுமார் 200 பேர் அமைதியான முறையில் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர் ஆயினும் எதுவித அசம்பாவிதமும் நிகழவில்லை என்று கூறப்பட்டது

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது: 'இலங்கைத் தமிழர்களின் கதை முழுமையாக வெளியுலகுக்குச் சொல்லப்படவில்லை

தமிழ்த் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் மிகைப்படுத்தியும் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது

இலங்கைத் தமிழர் போராட்டத்தில் எமது பங்கு அஹிம்சை வழி தழுவியதே" என்றார். [கி]

## முழுவிசாரணை நடத்த உத்தரவு

(கொழும்பு)

நெடுந்தீவு கடலில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக முழுவிசாரணை ஒன்றை நடத்துமாறு யாழ்ப்பாண பொலிசாருக்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## பாடசாலை மாணவர் வரவு குறைவு

[மானிப்பாய்]

சென்ற வியாழக்கிழமை நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகில் பிரயாணிகள் கொலையை அடுத்து யாழ்ப்பாணத்தில் பரவிய வதந்திகள் காரணமாக சென்ற வெள்ளிக்கிழமை மானிப்பாய் வட்டாரத்தில் பல பாடசாலை மாணவர்களது வரவு வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

அச்சம் காரணமாகவேபெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவில்லையெனத்தெரியவருகிறது.

## தமிழ்ப்பகுதி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துறையினரையும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வர்த்தகர்கள், மாணவர்கள், தொழிற்சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள், அரசஉத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரையும் இதற்கு ஒத்துழைக்கவேண்டுகிறோம்". [கி]

## இளைஞரின் இரு கால்களும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வயிற்றுவலி வேதனையால் வைத்தியரை நாடிச்சென்ற இளைஞர் ஒருவர் குண்டுவீச்சுக்கு இலக்காகி இரு கால்களும் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

குருநகரில் ஊரடங்குச்சட்ட நேரத்தில் இப்பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. (மா)

## கண்டனம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பில்லை என்று நான்கு தமிழ்த்தீவிரவாத இயக்கங்கள் கூட்டாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன

தமிழீழ விடுதலை இயக்கம் [ரெலோ], புலிகள் [தமிழீழ விடுதலைப்புலிகள்], ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ. பி ஆர். எல். எவ்.], ஈழப் புரட்சி அமைப்பு [ஈரோஸ்] ஆகிய நான்குமே இந்த இயக்கங்களாகும்.

இவை தமது மறுப்பு அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"அநுராதபுரம் படுகொலைச் சம்பவங்களுக்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை. அப்பாவி மக்கள் மீதான இப் படுகொலைகளைக் கண்டிப்பதுடன் கொலையுண்டவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்!"

இந்த அறிக்கை மேற்குறிப்பிட்ட நான்கு இலங்கைத் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களினாலும் சென்னையில் கூட்டாக வெளியிடப்பட்டுள்ளது. [கி]

## நெடுந்தீவு மரணங்கள்: 35 ஆக அதிகரிப்பு நேற்று ஒருவர் மரணம்!

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவுக் கடலில் சென்றுகொண்டிருந்த படகில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்தவர்களுள் மேலும் ஒருவர் மரணமானார்.

நெடுந்தீவைச் சேர்ந்த டி. சதாசிவம் (35 வயது) என்பவரே மரணமானவராவார்.

கடந்த 15ம் திகதி நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு படகில் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் ஆயுதம் தாங்கியவர்களால்கொலைசெய்யப்பட்டதும், காயமடைந்ததும் தெரிந்ததே.

இச்சம்பவத்தில் கொலைசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மேற்குறிப்பிட்டவருடன் சேர்ந்து 35 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## விடுதலை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கடத்தப்பட்ட வர்த்தகர் எஸ். எ, செல்லத்துரை நேற்றிரவு 7 மணியளவில் விடுக்கப்பட்டுள்ளார் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் குறுக்கு வீதியிலுள்ள அவரது வீட்டில் கொண்டுவந்து விடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [மா]

## நாட்டின் தற்போதையநிலை பாராளுமன்றம் 23ம் திகதி விவாதிக்கும்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலை குறித்து பாராளுமன்றம் இம்மாதம் 23ம் திகதி கூடி விவாதிக்கவுள்ளது. இப்பிரச்னை தொடர்பாக கூடிய விரைவில் விவாதம் ஒன்றை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் திரு. டீ. எஸ்.பி. தித்வெல தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து பாராளுமன்றத்தை விரைவில் கூட்டி விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

## வவனியாவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்அவர்அவஸ்தைப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது. [மா]

## நெடுந்தீவு..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விடுத்த விசேட வேண்டுகோளை அடுத்தே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மனிதாபிமான அடிப்படையில் மரணச் சடங்குச் செலவாக ரூபா 2,500 வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மூலம் ஜனதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் யாழ் அரசாங்க அதிபர் சொன்னர்.

மரணமானவர்களின் முதல் உறவினர் இப்பணத்தைப் பெறுவதற்கு உடனடியாக வேலணை உதவி அரசாங்க அதிபர் ஊடாக தகுந்த ஆவணங்களுடன் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் திரு. பஞ்சலிங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறார். [மா]

## திருச்சிச்சிறையில் 40 பேர் காயம்

[சென்னை]

திருச்சி சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த தி மு க, மறியல் போராட்டக்காரருக்கும் ஏற்கனவே குற்றச்சம்பவங்கள் தொடர்பாக சிறைவைக்கப்பட்டிருந்த கைதிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் 40 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலின்போது தீவைப்பும் இடம்பெற்றுள்ளது

சிறைச்சாலை அதிகாரிகள் நிலைமையைத் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். (மா)

## ஒழுக்கமின்றிப்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்குப் பணிந்து நடக்கவே பாதுகாப்புப் படையினர் பயிற்யசிளிக்கப்பட்டுள்ளனர்".

இந்நிலையில் அவர்கள் மிக உயர்ந்த தரத்தில் தமது ஒழுக்கத்தைக் கட்டிக்காக்கவேண்டும். போராயினும், சமாதானமாயினும் ஒழுக்கம் மிக முக்கியமானதாகும்" என்றார். [கி]

## யாழ். மத்திய..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டைப்பகுதியிலிருந்து பாய்ந்துவந்த குண்டொன்று யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள 'வாகை' மரத்தின் பாரிய கிளையில் மோதியதால் அக்கிளை முறிந்துவிழுந்ததாகத்தெரிவிக்கப்படுகிறது.

பீதியடைந்த மக்கள் கூட்டம் நலா பக்கமும் சிதறி ஓடத்தொடங்கியது.

### மூவர் பலி

இச்சூட்டுச் சம்பவங்களில் முற்றவெளிக்குமுன்னால் உள்ள சினிமாத்தியேட்டர் ஒன்றில் சினிமாப்படம் பார்த்துவிட்டு வெளியேவந்த மூவர் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானர்கள்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா நித்தியரத்தினம் 32வயது) இவர் வேலணை நிறைவேற்றுப் பொறியியலாளராகக் கடமையாற்றுபவர்.

யாழ் முனீஸ்வரன் வீதியில் புதர்களுக்கு மத்தியில் இவர் இறந்துகிடப்பதை வண்டிக்காரர் ஒருவர் கண்டுபிடித்து ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

மற்றவர் கே முத்துராசா (22 வயது) மூன்றுவது நபரின் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

### காயமடைந்தோர்

யாழ் பாங்ஷால் வீதியைச் சேர்ந்த செல்வி எம் சி மார்ஜியா, திருமதி செல்வமணி வேதநாயகம் நாரந்தனை (57 வயது), சின்னையா தர்மன் (40வயது ஆனைக்கோட்டை, க. மார்க்கண்டு (27 வயது) கைதடி தெற்கு ஆகியோர் உட்பட ஏழுபேர்படுகாயமுற்று ஆஸ்பத்திரியிலும் மற்றும்பலர் தனியார் ஆஸ்பத்திரிகளிலும் அனுமதிக்கப்பட்டுளளனர்.

யாழ் நகரில் நண்பகல் தொடக்கம் பதட்ட நிலை காணப்பட்டது

பீதியினல் கொட்டடி, மற்றும் பகுதிகளிலிருந்து மக்கள் குடும்பம் குடும்பமாக வெளியேறி அயல் கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் பொதுநூலகம், முனியப்பர் ஆலயம், வீரசிங்கம் மண்டபம், மத்திய கல்லூரி ஆகியனவற்றுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. [மா]


## மரண அறிவித்தல்

### கந்தையா நித்தியரத்தினம்

கந்தையா நித்தியரத்தினம் (நிறைவேற்றுப்பொறியியலாளர் நெடுஞ்சாலைத்திணைக்களம், வேலணை) அகால மரணமானர் அன்னர் மங்கையர்க்கரசியின் (நூலகர் பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்) அன்புக்கணவரும், நல்லூர் வீரகாளியம்மன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. கந்தையாவின் (பிரதம படவரைஞர் நீர் வழங்கல் சபை) அன்பு மகனும், திரு. மாணிக்கவாசகர் (இளைப்பாறிய யாழ். மேல்நீதிமன்ற பிரதிப்பதிவாளர்) அவர்களின் அன்புமருமகனும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 19ம் திகதி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்கொக்குவில் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

3340 — தகவல்: வ. ந. மாணிக்கவாசகர்



## மரண அறிவித்தல்

### வே. சங்கரப்பிள்ளை

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த வர்த்தகர் வே. சங்கரப்பிள்ளை காலமானர். தகனக்கிரியைகள் பற்றிய விபரம் நாளை திங்கட்கிழமை அறிவிக்கப்படும்.

3341 — தகவல்: ச. குலசிங்கம்


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O, Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126